Registered at the G. P. O as a Newspaper

VOUCHER COPY

விலை சதம் 10

# ஈழநாடு

EELA, NADU

போன்: 383

National Tamil Daily    தேசிய தினசரி

தபாற்பெட்டி எண்: 49

மலர் 4    யாழ்ப்பாணம்    சுபகிருது சித்திரை 18 ஆம் நாள்    துல்கஃதா 25    (1-5-62)    செவ்வாய்க்கிழமை    இதழ் 79

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பற்றி:-

# அதிகாரிகள் குழு கூடி ஆராயும்

## நேரு--சிறிமா சந்திப்புக்கு சூழ்நிலை தயாராகிறது

### சேர் ரிச்சார்ட் - திரு. கபூர் தலைமையில் பேச்சுவார்த்தை

கொழும்பு, திங்கள்

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை சம்பந்தமாக இலங்கை அரசாங்க அதிகாரிகளும் இந்திய அரசாங்க அதிகாரிகளும் விரைவில் கூடிப் பேச்சுவார்த்தை நடத்த விருக்கின்றனர். கொழும்பில் நடைபெறவிருக்கும் இப்பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் சேர் ரிச்சார்ட் அலுவிஹாரையும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பதில் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயசும். திரு. டி. பி. ஐ. பி. சிறிவர்த்தனவும் கலந்துகொள்வர். இந்திய அரசாங்கத்தின் சார்பில் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூரும் மற்றும் ஹைகமிஷன் அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

ஜூலை மாதத்தில் இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமர் திரு. நேரு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடன் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னைபற்றிப் பேசுவதற்கு, அதிகாரிகள் மட்டத்தில் நடக்கும் பேச்சுவார்த்தைகள் வழிவகுத்துக் கொடுக்கும்.

#### அறிக்கை தயாரிக்கிறார்

இப்பொழுது இலங்கையில் தங்கியிருக்கும் சர் ரிச்சர்ட், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னைபற்றி பூரண அறிக்கை ஒன்றைத் தயாரித்துவருகிறார். இந்த அதிகாரிகள் மகாநாடு வருகிற ஜூலை மாதம் பிரதமர் நேரு இலங்கை வரும்போது நேரு—ஸ்ரீமதி பண்டாரநாயகா பேச்சுவார்த்தைக்கு வழி வகுக்கும். திரு. நேருவுடன் காமன்வெல்த் காரியதரிசி திரு. வை. டி. கண்டேவியாவும் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. திரு. கண்டேவியா, முன்பு இலங்கையில் ஹைகமிஷனராய் இருந்தவர். அவர் இலங்கையில் இருந்தபோது இலங்கை—இந்திய பிரச்னைபற்றி நன்கு ஆராய்ந்துள்ளார்.

இரு பிரதம மந்திரிகளும் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் தோட்டங்களிலுள்ள "நாடற்றவர்" எனக் கூறப்படும் மக்கள்பற்றியப் பிரச்னை பிரதான இடம்பெறும் எனத் தெரிகிறது.

சென்ற வாரம் பார்லிமென்டில் பேசிய திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா; வருகிற ஜூலை மாதம் நேருஜி இலங்கை வரும்போது இலங்கை—இந்திய பிரச்னைபற்றி விவாதிக்கப்படும் என அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## 'வலுத்தாக்குதலைச் சமாளிக்க இந்தியா தயார்'

—நேரு

### "சொல்ல வேண்டியதை சபையில் சொல்வேன்"

—மேனன்

புதுடில்லி, ஏப்ரல் 30

காஷ்மீரில் அல்லது இந்தியாவின் வேறுபகுதியில் பாகிஸ்தானோ அல்லது வேறு யாருமோ வலுத்தாக்குதல் மேற்கொண்டால் அதைச் சமாளிக்க முற்றும் தயாராய் இருப்பதாக பிரதமர் நேரு இங்கு கூறினார்.

காஷ்மீர் விஷயமாக பாகிஸ்தான் இன்னொரு வலுத்தாக்குதல் நடத்தவேண்டியிருக்கும் என சர் முகம்மது ஸபருல்லா கான் கூறியதாக சுட்டிக்காட்டப்பட்டபொழுதே நேரு இவ்வாறு தெரிவித்தார். "மிரட்டல்களால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்றும், பாகிஸ்தானின் வாதம் பொய்யை அடிப்படையாகக் கொண்டது என்றும் அவர் மேலும் கூறினார்.

பாதுகாப்பு சபையில் இந்தியாவின் சார்பாக ஆஜராகவிருக்கும் திரு. வி. கே. கிருஷ்ண மேனன் நேற்று நியூயோர்க் வந்து சேர்ந்தார். நிருபர்களிடம் எதுவும் கூற மறுத்த அவர்' "சொல்லவேண்டியதை பாதுகாப்பு சபையில் சொல்வேன்" எனக் கூறிவிட்டுச் சென்றார்.

## ஜெனீவா மகாநாட்டில் முன்னேற்றம்

### யு. எஸ். அணுசோதனை காரணம்

ஜெனீவா, ஏப். 30

அமெரிக்கா அணுசோதனையை ஆரம்பித்ததைத் தொடர்ந்து 17 நாடுகளின் படைக்குறைப்பு மகாநாட்டில் முன்னேற்றம் கண்டுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் அணுத் தடை பற்றித் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை ரஷ்யா நடத்தும் எனத் தோன்றுவதாக ராஜதந்திர பார்வையாளர்களும், சில நடுநிலைமைப் பிரதிநிதிகளும் கூறுகின்றனர். மேதினக் கொண்டாட்டத்திற்குப் பின் மூன்று நாடுகளின் அணுத் தடை உபகமிட்டி நடைபெறுமெனத் தெரிகிறது.

பரந்த அளவான ஆயுதப் பரிகரணப் பேச்சுவார்த்தைகளையும் தொடர்ந்து நடத்துவதென ரஷ்யா உத்தேசித்திருப்பதாய்த் தெரியவருகிறது.

## மேதின நிகழ்ச்சிகள்

கொழும்பு, திங்கள்

இலங்கையில் நாளை, பல அரசியல் கட்சிகள் மேதினத்தைக் கொண்டாடுகின்றது. சுதந்திரசதுக்கத்தில் நாளை பிற்பகல் மூன்றுமணிக்கு நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார். கூட்டத்தில் மந்திரிகள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்

கொழும்பு நகரமண்டபத்தில் நாளை நடைபெறும் லங்கா சமசமாஜக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு ரோமாபுரியிலிருந்து இன்று இலங்கை திரும்பிய டாக்டர் என். எம். பெரேரா தலைமைவகிப்பார். காலியில் மேதினக் கூட்டம் காலி எம்.பி. திரு. டபிள்யு. தஹநாயக்கா தலைமையில் காலி முற்றவெளியில் நடைபெறும். பொதுச்சேவை ஸ்தாபனத்தினதும்—தொழிற் சங்கங்களின் இணைப்பு சம்மேளத்தினதும் கூட்டம் பிரைஸ்பார்க்கில் நாளை காலை 11 மணிக்கு நடைபெறும்.

மேதினத்தை முன்னிட்டு நாளை அரசாங்க வங்கி விடுமுறை தினமாகும்.

## 'வாயிஸ் ஓவ் அமெரிக்கா' ஒலிபரப்பு காலம் நீடிப்பு

கொழும்பு, திங்கள்

இலங்கைப்பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் செல்வி பிரூன்செஸ் ஈ வில்லீஸும் இன்று 'வயிஸ் ஓவ் அமெரிக்கா' ஒலிபரப்புக்கான காலத்தை நீடிக்கும் பத்திரங்களைப் பரிமாறிக்கொண்டார்கள். 1971-ம் ஆண்டு மேமாதம் 14-ம் திகதி வரை ஒலிபரப்புக்கான புதிய உடன்படிக்கை செய்து முடிக்கப்பட்டது.

இலங்கை வானொலி அளிக்கும் வசதிகளுக்காக இப் புதிய உடன்படிக்கைமூலம், ஒலிபரப்புக்கான நிதி உதவிகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு அளிக்கும். முன்னர் இருந்த உடன்படிக்கையிலில்லாத பல வசதிகளை, இப் புதிய உடன்படிக்கைமூலம் அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு அளிக்கிறது.

இலங்கையின் தேசிய நலனைப் பாதிக்கக்கூடிய ஒலிபரப்புகளை இலங்கை அரசாங்கம் தடைசெய்யும் உரிமை கொண்டிருக்கிறது.

## ரஷ்ய நிபுணர்குழு

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையே ஒழுங்கான கப்பற் போக்குவரத்துச் சேவை யொன்றை ஆரம்பிக்கும் முகமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்த, ரஷ்ய நிபுணர்கள் குழுவொன்று ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வரக்கூடுமெனத் தெரிகிறது.

## இன்று

இன்று பிற்பகல் 3-30 க்கு காரைநகர் சைவ மகாசபையில் "கலைமகள்" ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் "நால்வர் போனவழி" என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாணம் கிளைக் காரியாலயத்தை இன்று காலை பத்து மணிக்கு திரு. எட்மண்ட் சமரக்கொடி திறந்துவைப்பார்.

## பங்கீட்டு முறையில் கருவாடு விநியோகம்

கொழும்பு, திங்கள்

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களுக்கும், அடையாளச் சீட்டுக்களுக்கும் நாளைமுதல் கருவாடு, பங்கீட்டு உணவுப் பொருளாக விநியோகிக்கப்படும். பங்கீட்டுப் புத்தகமொன்றுக்கு அரை றாத்தல் வீதம் கருவாடு விநியோகிக்கப்படும்.

# மனைவியின் அன்பைப்பெற பிள்ளையைக் கொடுக்கவும்

## பராமரிப்பு உரிமை வழக்கில் கணவனுக்கு நீதிபதி யோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு "பிரசவ வேதனையைப் பற்றி பெற்றவளுக்கே தெரியும். எதிரி தனது மனைவியை எவ்வளவுதூரம் துன்புறுத்தியுள்ளார் என்பதையும்மீண்டும்அத் துன்பத்துக்குள்ளாக அவள் விரும்பாததையும் நீரும் நானும் உணரமுடியாது. அவளால்தான் உணரமுடியும்"

இவ்வாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால் டன துன்னாலையைச் சேர்ந்த 22 வயதுடபெண் பூபதி தனது இரண்டரை வயதுடைய நாகேஸ்வரி என்ற மகளை பிரித்திருக்கும் தனது கணவனிடமிருந்து பெற்றுக்கொடுக்குமாறு கோரிய வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. கே. வி எஸ். சண்முகநாதனிடம் கூறினர்.

பூபதி தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

1958-ம் ஆண்டில் ஆரியகுளதில் வசிக்கும், இவ்வழக்கில் எதிரியான செல்லன் சீனியன் என்பவரை விவாகஞ்செய்து கொண்டேன். நான் கர்ப்பவதியாக இருந்தகாலத்தில் எமது தமிழ் மரபின் வழியுள்ள ஒரு வழக்கத்தைச் சொல்லி வந்துள்ளேன். முதல் நமது பிள்ளைப் பெறுவுக்கு பெண்ணின் தாய் வீட்டிற்குப் போகும் வழக்கத்தை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். வீட்டிலேயிருந்த அவருடைய தகப்பனும் ஏனையோரும் இதற்கு முழு எதிர்டபைக் காட்டி வந்திருக்கிறுர்கள். அத்துடன் எனது கணவனிடமும் பல கதைகள் சொல்லியதால் அவர் குடித்து விட்டுவந்து என்னை அடிக்கும் வழககமும் ஏற்பட்டது. காலஞ்செல்லச்செல்ல எனது தாயார் வீட்டிற்கு பிரசவத்திற்குப் போகவேண்டியதை வற்புறுத்தினேன். எனது கர்ப்பம் 8 மாதத்தில் இருக்கும் சமயத்தில் ஒருநாள் குடிவெறியுடன் வந்த அவர் என்னைக் கையில் பிடித்து இந்தப்பக்கம் இனிமேல் திரும்பாதே என்று வெளியேற்றினுர். நான் பஸ்ஸில் ஏறி 20 மைல்களுக்கு அடாலுள்ள துன்னாலை தெற்கிலிருக்கும் எனது பெற்றுர் வீட்டிற்குப்போய்ச்சேர்ந்தேன்.

### குழந்தையைக் கொண்டுசென்றுர்

குழந்தை பிறந்ததும் எனது கணவனுக்கு அறிவித்திருந்தேன். ஆனல் அப்பக்கம் வரவேயில்லை. பிள்ளைக்கு 6 மாதம் நிரம்பியதும் பிள்ளையின் பராமரிப்புப் பணம் கோரி பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டு மாதம் பதினேழரை ரூபாய் கொடுக்கும்படி தீர்ப்பளித்தார்கள். 2 மாதங்கள் இப்பணத்தைக் கொடுத்தபின் துன்னாலையில் எனது பெற்றுர் வீட்டில் வந்து என்னுடன் ஒற்றுமையாக வாழ்ந்தார். 6 மாதகாலத்தின் பின் நான் 4 மாத கர்ப்பிணியாக இருக்கும்போது நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் போகவேண்டுமென்று என்னை வற்புறுத்தினர். ஆனல் பிரயாணஞ் செய்ய தகுதியற்ற நிலையிலிருப்பதை எடுத்துக்காட்டியும் அவர் அதைக் கவனியாது என்னை அடித்துத் துன்புறுத்தினர். இது என் தாயார் முன்னிலையில் நடந்தது. பின்பு எனது பிள்ளையைக் கோவிலுக்குக் கொண்டு போவதாக என்னிடம்சொல்ல நானும்அதற்கு இணங்கினேன். கோவிலுக்குப்போகும் சமயத்தில்4 தங்கப்பவுண் நிறையுள்ள நகைகளாக சங்கிலி, காப்பு, மோதிரம் ஆகியவற்றைப் பிள்ளைக்கு அணிந்துவிட்டிருந்தேன். அன்று அவர்கள் திரும்பாததனல் எனது தம்பியை அனுப்பினேமாயினும் அவர் திருப்பியனுப்பப்பட்டார்.

திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தபோது தனக்கு அடித்ததைப்பற்றி தான் பொலிஸாரிடமோ கிராமத்தலைமைக் காரரிடமோ முறையிடவில்லை என்று பூபதி தெரிவித்தார்.

**வழக்கறிஞர்:-** பொலிசாருக்கோ. தலைமைக்காரருக்கோ நீர் முறையிடாததன் காரணம் என்ன?

வழக்காளி:- அடிபடுவதும் மீண்டும் ஒற்றுமையாக இருப்பதும் எமது குடும்பங்களுக்கிடையே சகஜம் தானே. ஆகவே பொறுமையாக இருந்தேன்.

மாஜிஸ்டிரேட்: கணவனை எதிர்க்கும் வழக்கமோ அவரைப்பற்றி முறைப்பாடுகூறும் வழக்கமோ தமிழ்ப் பெண்ணின் மரபில் இல்லையே!

வழக்கறிஞர்:- அதற்காகவே இருபகுதியினரையும் ஒற்றுமையாக்க நாமும் முயல்கிறேம். ஆகவே இனிமேல் கணவனுடன் சென்று ஒற்றுமையாக வாழ்ந்தாலென்ன?

வழக்காளி:- ஆரியகுளத்தில் இவரது வீட்டில் சென்று வாழமுடியாது. விரும்பினல் துன்னாலையில் எமது வீட்டில் வந்து நன்கு வாழலாம்.

வழக்கறிஞர்:- அவர் பிழைப்புத்துறை இங்கிருக்கும் போது எவ்விதம் துன்னாலைக்கு வருவது?

வழக்காளி:- வருடம் முழுமையும் பிழைக்கக்கூடிய போதிய வசதி எம்மூவரிலும் உண்டு. எங்கள் சீதன வளவிலேயே பனைகளும் தென்னைகளும் உண்டு. சீவிப்பிழைக்கலாம்.

**வழக்கறிஞர்:-**உமது வீட்டிலிருக்கவேண்டியது தானே இருவருக்குமிடையேயுள்ள நீண்ட நாள் பிணக்கு?

வழக்காளி:- நான் அனுபவித்த கஷ்டத்திலேயே இவரது வீட்டை நான் விரும்பவில்லை. அங்கே இருக்கப் போவதுமில்லை ஒற்றுமை பற்றிய பேச்சல்ல ஐயா எனக்குத்தேவை எனது பிள்ளை தான் வேண்டும் இவரது வீட்டில் பிள்ளையை வளர்க்கப் பெண்களும் கிடையாது!

நீதிபதி எதிரிதரப்பு வழக்கறிஞரிடம் மேற்கண்டவாறு கூறி பிள்ளையைத் தாயிடம் கொடுக்குமாறு கேட்டார். அதற்கு எதிரி பிள்ளையைக் கொடுக்க மறுப்புத் தெரிவித்தார்.

வழக்காளியின் வழக்கறிஞர்: ஒற்றுமையை விரும்பினல் பிள்ளையை முதலில் கொடுக்க வேண்டும். அப்படியானல் தான் வழக்காளியின் அனுதாபத்தைப் பெறமுடியும்.

நீதிபதி:- எதிரி வழக்காளியின் அன்பை இனியாவது பெறவிரும்பினல் பிள்ளையை முதலில் தாயிடம் கொடுக்க வேண்டும்.

இந் நிலையில் மேல் விசாரணை மே மாதம் 2-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்காளி சார்பில் திரு. எஸ். சுந்தரலிங்கம், திரு. எஸ். வன்னியசிங்கம், திரு. வி. நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரி தரப்பில் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு.ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர்.

---


### தேவை

**எங்கள் வவுனியாவிலிருக்கும் "சிவசக்தி"என்னும் வியாபார ஸ்தாபனத்திற்கு ஒரு அதிபர் (மனேஜர்)தேவை.** கீழ்க்காணும் தகமையுள்ளவர் விண்ணப்பிக்கலாம். 1. வியாபார அனுபவமுடையவர்,2. 40 வயதிற்குக் குறையாதவர், 3. நடைமுறையில் தமிழில் வேலைசெய்யக் கூடியவரும் ஆங்கிலம், சிங்கள பாஷைகளில் அனுபவமுள்ளவர், 4. ரூ.1500க்கு குறையாத ரொக்கப்பிணையும் ரூபா 3500/- ஆதனப்பிணை அல்லது வேறு விதமான பிணையும் கொடுக்கக் கூடியவர், 5. தகுந்த இரு நற்சாட்சிப்பத்திரம், 6. மற்றும் நிபந்தனைகள் நேரில் அறிந்து கொள்ளலாம்.

உணவு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

செ. அண்ணமலை,
பொறுப்பாளர்.

சிவசக்தி,
வவுனியா,
28-4-62.


---


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15.50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல பவியாளருக்கும் நற்சாட்சிப்த்திரக்திகளடங்கிய கற்றலோங் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்.**
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.


---

# இ. போ. ச. பட்டதாரிகள் முறையீடு

கொழும்பு, திங்கள் குறைந்தது 5 வருடம் கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையில் ரூ. 19,000 பெறுமதியான பிணைப்பத்திரத்தில் கையெழுத்திடுமாறு சமீபத்தில் அழைக்கப்பட்டவர்களான இ. போ. ச. வில் பரீட்சார்த்தகால அடிப்படையில் கடமையாற்றும் பட்டதாரிகள் இதுபற்றி ஜெனரல் மனேஜருக்கு முறையிட்டிருக்கிறுர்கள்.

தாங்கள் வேலையில் சேர்ந்து 6 மாத காலத்திற்குள்தான் இப்படி அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர். வேறு சபைகள் அல்லது கார்ப்பரேஷன்களில் இவ்வித முறை பின்பற்றப் படுவதில்லை என்றும், உயர்ந்த சம்பளம் அளிக்கப்படுபவர்கள் அப்போது வெளி நாடுகளுக்குப் பயிற்சிக்காக அனுப்பப் படுபவர்களிடமே இவ்வாறு கேட்கப்படுவதாயும் அவர்கள் கூறியுள்ளனர்.

# ஐ. அ. குடியரசு தேசிய காங்கிரஸ் ஒத்திவைப்பு

கெய்ரோ, ஏப். 30 மே 5ம் தேதி நடைபெறவிருந்த ஐக்கிய அராபியக் குடியரசு தேசிய காங்கிரசின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை மே 21ம் தேதிக்கு ஒத்திவைக்க ஜனதிபதி நாஸர் உத்தரவிட்டிருக்கிறுர். இதற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் புதிய தேசிய சாசனம் ஒன்றை ஜனதிபதி வெளியிடவிருந்தார். இந்த சாசனம், நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் பரந்த அடிப்படையை விளக்குவதாய் இருந்தது.

# மாஸ்கோவில் லாவோஸ் தளபதி

மாஸ்கோ, ஏப். 30 லாவோஸிலுள்ள நடு நிலைமைப் படைகளின் தளபதி ஜெனரல் காங்லே, மாஸ்கோ வந்திருக்கிறுர். சோவியத் பாதுகாப்புஅமைச்சின் அழைப்பிற்கிணங்க அவர் வந்திருக்கிறுர்.




# ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டபோதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனையே தினமும் உங்கள் தேகம் எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பெருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




**ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.**

# ப்ரான்ட்ஸ்

**எஸன்ஸ் ஒப் சிக்கன்**

AT-712-1

# அணு ஆயுத சோதனைகள்; நேரு ஆழ்ந்த கவலை

## வருங்கால மக்களுக்கே தீங்கு விளைவிக்கும் என கருத்து

புதுடில்லி, ஏப்ரல் 30

அணு ஆயுத சோதனைகளை அமெரிக்கா தொடர்ந்து நடத்திவருவதற்கு பாரதப் பிரதமர் நேரு தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

வல்லரசுகள் ஒன்றையொன்று இன்னும் நம்பவில்லையென்பதுதான் அணு ஆயுத சோதனைகள் தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம் என்று திரு. நேரு கருத்து தெரிவித்தார்.

காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டத்தில் பிரதமர் நேரு நேற்று பேசினார்.

வல்லரசுகளுக்கிடையேயுள்ள இந்த அவநம்பிக்கை படை விலக்கல், அணு ஆயுத சோதனைத் தடை சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளைப் பயனற்றதாக்கி விடுமென்று பிரதமர் நேரு கூறினர்.

உலக சமாதானத்தையும், உலக அமைதியையும்தான் மக்கள் விரும்புகிருர்கள். அணு ஆயுத சோதனைகள் உலக அமைதியைக் கெடுத்துவிடுவதுடன் வருங்கால மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும். படைவிலக்கமும் உலக சமாதானமும் மிகமிக அவசியமும் அவசரமும் என்பதை அணு ஆயுத சோதனைகள் தெளிவாக்கிவிட்டன என்று பிரதமர் நேரு தெரிவித்தார்.

# பாகிஸ்தான் தேர்தலில் அரசியல்வாதிகள் வெற்றி

டாக்கா, ஏப்ரல் 30

பாகிஸ்தானில்ராணுவஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பின் முதல் தடவையாக நடைபெற்ற தேர்தலில் பழைய அரசியல் கட்சித் தலைவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். அரசியல் கட்சிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளபோதிலும் அரசியல் தலைவர்கள் அதுவும் குறிப்பாக கிழக்குப் பாகிஸ்தான் தொகுதிகளிலிருந்து வெற்றிபெற்றிருப்பது பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கானின் கொள்கைகளுக்கு மறுப்புத் தெரிவிப்பதாகவுள்ளதெனக் கருதப்படுகிறது.

மேற்குப் பாகிஸ்தான் தேர்தல் முடிவுகள் இன்னும் விபரம் தெரியவில்லையாயினும் அங்கும் அரசியல் வாதிகள் பலர் வெற்றிபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி அயூப்கானின் அரசாங்கத்தில்மந்திரிப்பதவிவகிப்பவர்களில் மூவர் இதுவரை வெற்றிபெற்றுள்ளனர். ஜனாதிபதி அயூப்கானின் சகோதரரும் வெற்றியீட்டியுள்ளார். முஸ்லிம் லீக்கின் முன்னுள் பொதுக் காரியதரிசியும் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார்.

# பிரஜாசோஷலிஸ்டுடன் இணைய லோகியா விருப்பம்

புதுடில்லி, ஏப்ரல் 30

தமது கட்சி பிரஜாசோஷலிஸ்ட் கட்சியுடன் இணைய வேண்டும் எனத் தாம் விரும்புவதாயும், அதிகக் காலதாமதமின்றி அவை இணையவேண்டுமென்றும் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் டாம் மனேகர் லோகியா கூறினர். தனது கட்சியின் சோஷலிஸ்ட் கொள்கையின் அடிப்படையில், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி தலைமைப் பதவியை வகிக்கலாம் என அவர் கூறினர்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி பாட்னவில் நடத்திய அதன் கூட்டத்தில் இரு கட்சிகளும் இணையவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுளளது.

## பேர்லின் பிரச்னை

### திரு. றஸ்க்கருத்து

லண்டன், ஏப். 30

அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் றஸ்க் லண்டனில் நடைபெறவிருக்கும் ஒரு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்துள்ளார்.

பெர்லினில் மேற்கத்திய நேசநாடுகளுக்குள்ள உரிமையை சோவியத் யூனியன அங்கீகரிக்க மறுப்பதால் தான் பெர்லின் பிரச்னைக்குத் தீர்வு காண்பது கஷ்டமாக இருக்கிறதென்று திரு. டீன் றஸ்க் நிருபர்களிடம் தெரிவித்தார். பெர்லினில் நேசநாடுகளுக்கு சுதந்திரமான போக்குவரத்து உரிமை இருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கிழக்குப் பெர்லினை அமெரிக்கா அங்கீகரிக்குமா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, "இல்லை" என்று திரு. றஸ்க் பதிலளித்தார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபுவுடன் திரு றஸ்க் பெர்லின் பிரச்னை மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றி ஆலோசனை நடத்துவார்.

## தண்ணீரில் சைக்கிள் ஓட்டம்

### இராமக்கிளி சவால்!

நாவலப்பிட்டி, திங்கள்

மலைநாட்டிலுள்ள சைக்கிள் வீரர் திரு. எஸ். எம். இராமக்கிளி தண்ணீரில் சைக்கிள் ஓட்டுவதற்கான போட்டியில் தம்முடன் கலந்துகொள்ளும்படி சவால் விடுத்திருக்கிருர். சமீபத்தில் மன்னரில் நடைபெற்ற தண்ணீர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் ஒரு வீரர் தடைகளின் உதவிகொண்டு ஓட்டியதாகத் தெரிய வருகிறது. எவ்வித தடைகளினதும் உதவியின்றித் தான் தண்ணீரில் சைக்கிள் ஓட்டிக் காட்ட முடியும் எனக் கூறினர் திரு. இராமக்கிளி.

## மண்டலாபிஷேகம்

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு - மடத்துவெளி ஸ்ரீ பால சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் மே மாதம் 10-ந் திகதி 'மண்டலாபிஷேகம்'நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

மேற்படி ஆலய புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்த 45 நாள் நடைபெறவிருக்கும் இந்த அபிஷேகத்தையொட்டி 'அன்னதானம்' நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆக்கவேலைகளில் ஆலய பரிபாலன சபையினர் ஈடுபட்டுள்ளனர். இரவு சமயப்பிரசாரத்திற்காக 'சமயப்பிரசங்கம்'நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கனடாவில் மாக்மிலன்

ஒட்டாவா, ஏப். 30

அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடியுடன் நடத்திய பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலன் இன்று ஒட்டாவா வந்து சேர்ந்தார். இங்கு கனடாப் பிரதமர் திரு. டீபன் பேக்கருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## சிட்னியில் எதிர்ப்பு

சிட்னி, ஏப். 30

அமெரிக்கா மீண்டும் அணு ஆயுத சோதனையை ஆரம்பித்ததற்கு மேலும் பல இடங்களில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள கலந்து கொண்டனர்.

## எல்லைப் பிரச்சினை பற்றி சீன அறிக்கை

ஹாங்காங், ஏப். 30

சீன—இந்திய எல்லைப் பிரச்சினைபற்றி சீன வெளிவிவகார அமைச்சு ஒரு அறிக்கையைப் பிரசுரித்திருக்கிறது. சீனவின் நிலை சரியானது என்பதை இந்த அறிக்கை எடுத்துக் கூறுகிறது.

# ஈழத்தையும் தமிழகத்தையும் இணைத்தநூல் சிலப்பதிகாரம்

## அகிலஇலங்கை தமிழ்எழுத்தாளர் மகாநாட்டில் பண்டிதர் இரத்தினம் உரை

கொழும்பு, ஞாயிறு

"தமிழினத்தின் தலைக்காப்பியமும், தித்திக்கும் முத்தமிழ்க் களஞ்சியமும், நெஞ்சை அள்ளும் செஞ்சொல் ஓவியமுமான சிலப்பதிகாரத்தை முதன்முதலில் சிங்கள மொழியிற் சிறப்பாக மொழிபெயர்த்துச் செயற்கருஞ் செயல்செய்த அளப்பரும் பெருமைக்குரியவர் இன்று நாம் பாராட்டும் வணக்கத்துக்குரிய தர்மரத்ன தேரோ ஆவார்" என்று கொழும்பு சாஹிராக் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் வண. தர்மரத்ன தேரோவைப் பாராட்டிப் பேசும்பொழுது திரு. கா.பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. இரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:-

"இலங்கையிலே தமிழ்மொழியும், சிங்களமொழியும் பல நூற்றாண்டுகள் நிலைத்து வளர்ந்து வந்திருக்கின்றன. சிங்கள மன்னர்களுடைய அவைகளைத் தமிழ்ப் புலவர்களும் அணிசெய்துளர். பௌத்த கோயில்களிலே தமிழும் கற்பிக்கப்பட்டதென்பதைச் சிங்களத்தூதப்பிரபந்தங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. தமிழ் வாயிலாக இலக்கண முறைகளும், புராணக்கதைகளும், அறநூல்களின் கருத்துக்களும் சிங்களமொழியைச் சேர்ந்துள எனினும் தமிழினத்தின் தலைக்காப்பியமும், தித்திக்கும் முத்தமிழ்க் களஞ்சியமும், நெஞ்சையள்ளும் செஞ்சொல் ஓவியமுமான சிலப்பதிகாரத்தை முதன்முதலில் சிங்கள மொழியிற் சிறப்பாக மொழிபெயர்த்துச் செயற்கருஞ் செயல்செய்த அளப்பரும் பெருமைக்கு உரியவர் இன்று நாம் பாராட்டும வணககத்துக்குரிய தர்மரத்ன தேரோ ஆவார். இவருடைய தமிழார்வத்தையும் தமிழ்ப்புலமையினையும் நான் நன்கறிவேன். இவருடைய தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்துளேன்.

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழமும் தமிழகமும் இணைந்த செய்தியைக் கூறும் தனிச்சிறப்புக்குரியது சிலப்பதிகாரம். பத்தினிக்கடவுளுக்குச் சேரன் செங்குட்டுவன் எடுத்த பெருவிழாவிலே இலங்கை மன்னன் கயவாகு கலந்துகொண்டான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. கயவாகு மன்னன் கண்டியிலே பத்தினித்தெய்வத்துக்குக் கோயில் எடுத்து விழா நடத்தினன். அவனலே பத்தினித் தெய்வ வழிபாடு இலங்கையிலே பரவிற்று.

சமணசமயத் துறவியாகிய இளங்கோ செய்த இன்தமிழ்க் காப்பியத்தை, பௌத்தசமயத் துறவியாகிய மதிப்புக்குரிய தர்மரத்தினதேரோ சிங்கள மொழியிலே மொழிபெயர்த்துளர். சூழ்வினைச் சிலம்பினலேயே மணிமேகலை புத்தசமயத் துறவியாகி அச்சமயத்துக்குப் பெருந் தொண்டாற்றினர். எனவே சிலப்பதிகாரமும் புத்தசமயத்துடன் தொடர்புபட்டுள்ளது. இத்தகைய காப்பியத்தை மதிப்புக்குரிய தேரோ அவர்கள் சிங்களத்தில் மொழிபெயர்த்துத் தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் நற்றெண்டாற்றியுளர்.

இலங்கையிலுள்ள இருபேரினத்தவர்களும் ஒன்றுபட்டுச் சிறந்து வாழுதற்கு இத்தகைய பணிகள் உதவிசெய்யும். இலங்கைக்கு இன்று இத்தகைய பணிகளே இன்றியமையாது வேண்டப்படுகின்றன. தேவைக்கேற்ற சிறந்த பெரும் பணியை ஆற்றிய தேரோ அவர்களுக்கு இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சார்பில் மட்டுமன்றி உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் சார்பிலும் நன்றி கூறுகின்றேன்.

கதைகளை வாசிப்போரிலும் கதைகளை எழுதுவோர் மிகப் பெருகும் இந்நாளிலே பழம் பெருங் காப்பியத்தை மொழிபெயர்த்துப் பெருந்தொண்டாற்றிய அருமைப்பாட்டை உணர்ந்து மதிப்புக்குரிய தேரோ அவர்களைப் பாராட்ட முன்வந்த எழுத்தாளர்களையும் பாராட்டுகிறேன்.

பழமையும் புதுமையும் போட்டியிடாமல் இணைந்து பிணைந்து எழில்பெறும் முறையிலே மனித இனத்தின் வாழ்வை வளப்படுத்துவதற்காகவே இலக்கியத்தைப் படைத்தல் வேண்டும் என்பதை எழுத்தாளர்கள் சிலர் இடையிடையே மறந்துவிடுகிருர்கள் இந்த மறதியை இத்தகைய பாராட்டுக்கள் நீக்கத்தக்கன.

கீழ்க் கணக்கு, மேற்கணக்கு என்ருல் என்ன என்று அறியாதவர்களும், புகார்க் காண்டம் என்ருல் எங்கே உள்ள கண்டம் என்று கேட்கிறவர்களும் இப்பொழுது இலக்கிய விமர்சகர்களாகப் பட்டை நாமம் போடுவது நகைப்புக்கு இடமான செயலாகும்.

தமிழ் நாட்டிலிருந்து இங்கு வரும் கலைஞர்களையும் பத்திரிகைகள், நூல்கள் முதலியவற்றையும் தடுக்க வேண்டும் என்று சிலர் குரல் எழுப்புகின்றனர். உலகம் முழுவதும் ஒன்ருக வேண்டும். உலக அரசு தோன்ற வேண்டும் என்று அறிஞர்கள் பரக்க எண்ணும் இக்காலத்தில் இவ்வாறு சிறுக்க நினைப்பது முற்போக்காகாது. இதனுல் தனிப்பட்டோர் சிலர் சிறிது பயனடையலாம். ஆனல் எங்கள் இனமோ மொழியோ கலையோ எவ்வித பயனையும் அடையாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

# பார்லிமெண்டில் கேள்வி-பதில்

சமீபத்தில் பார்லிமெண்டில் கேட்கப்பட்ட சில கேள்விகளும் அதற்கு அளிக்கப்பட்ட பதில்களும் இங்கு விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் டபிள்யூ டி. டி. சில்வா கேள்வி பொரளை எம். பி.**

(அ) பாடசாலைகளின் விடுதிகள் யாவும் அரசாங்கத்தினல் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறபோது அவைகளில் வேலைசெய்பவர்களை அரசாங்கம் இன்னும் தனக்குக் கீழ் வேலை செய்பவர்களாக கருதவில்லை என்பது மந்திரிக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானல் எப்பொழுது அவர்கள் அரசாங்கத்தின் கீழ் வேலைசெய்பவர்களாகக் கருதப்படுவார்கள். எனவும் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கவும்.

கல்வி மந்திரிக்காக பதிலளித்த உதவிக் கல்வி மந்திரி திரு. வி. ரி. ஜி. கருணரத்ண கூறியதாவது:-

(அ) ஆம். விடுதிகளில் வேலைசெய்பவர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படவில்லை.

(ஆ) அவர்கள் அரசாங்கத்தின் கீழ் வெலைசெய்பவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்களுக்கு விடுதிகளின் நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**திரு. ரி. சிவசிதம்பரம் கேள்வி வவுனியா எம். பி.**

(1) வவுனியா எம். பியினல் 18-1-1962ல் அனுப்பப்பட்ட பதிவுத் தபாலில் குறிப்பிட்டவைகள் அம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(அ) 1962 ஜனவரி 12ம் திகதி வவுனியாப் பொலிஸாரினல் திரு. எம். சிவபாதசுந்தரமும் 10 பேரும் தாக்கப்பட்டது.

(ஆ) 4 பேர்களை அடைக்கக்கூடிய "லொக்கப்-அப்" அறையில் திரு. சிவபாதசுந்தரத்தையும், மற்றும் 10 பேரையும் முற்றும் முரணைவகையில் 24 மணி நேரம் அடைத்து வைத்திருந்ததும், மேற்கொண்டும் சித்திரவதைப்படுத்து முகமாக "லொக்-அப்"புக்குள் தண்ணீரை ஊற்றி அவர்களை இருப்பதற்குகூட விடாமல் செய்தது.

(இ) பொலிஸ் நிலையத்தில் அவமதித்தது, தாக்கியது, பட்டினி போட்டது.

(2) இது சம்பந்தமாக இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராவிட்டால் ஏன் இதுவரைகாலமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைச் சொல்லுவாரா?

(3) இது விஷயத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுமா அல்லது ஏன் எடுக்கப்படமாட்டாது?

பிரதமரது பாராளுமன்றக் காரியதரிசியும், பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியுமான திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில் கூறியதாவது:-

1 (அ) உங்கள் கடிதம் கிடைத்ததும் வடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டன்ட் மன்னரிலுள்ள உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட்டிடம் விபரத்தை தெரிவித்திருந்தார். அவர் உடனடியாக குறிப்பிட்ட தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்த தமக்கு முன்னர் சமூகம் தரும்படி திரு. சிவபாதசுந்தரத்தைக் கேட்டிருந்தார். ஆனல் திரு. சிவபாதசுந்தரம் சுகவீனம் என்று விசாரணைக்குச் செல்வதை பின்போட்டு வந்து இறுதியில் 2-2-62ல் மன்னர் பொலிஸ் உதவி சுப்பிரிண்டனுக்கு கொடுத்த தகவலில் தாம் பொலிஸார் மீது வழக்குத் தொடருவதாகவும், தமது வழக்கறிஞர்கள் இலாகா நடத்தும் எந்த விசாரணைகளிலும் வழக்குகள் முடியும் வரையில் கலந்துகொள்ளவேண்டாமெனக் கேட்டிருப்

(5ம் பக்கம் பார்க்க)

### மணி வாக்கு

"வாயினால் சொல்லும் மந்திரம் மட்டும் பிரார்த்தனையாகாது. உள்ளத்திலிருந்து பிரார்த்தனை தோன்ற வேண்டும். அப்போது ஒவ்வொரு செயலும் எண்ணமும் கூட பிரார்த்தனையாகும்."

— மகாத்மா காந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 18 மீ உ (1-5-62)

## மே திருநாள்

சென்ற ஆண்டு மேதினத்தன்று இப்பத்திகளில் நாம் தொழிலாளரின் ஒற்றுமையைப் பற்றி வற்புறுத்தி இருந்தோம். ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்ற சட்டம் ஏற்பட வேண்டுமென்றும் இப்பொழுது ஒரு தொழிலில் பல போட்டி யூனியன்கள் இருந்து தொழிலாளரின் ஒற்றுமையைக் குலைத்து வருகிறதென்றும் இதனால் தொழிலாளரின் கட்சி பலவீனமடைந்துள்ளதென்றும் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இந்த வருடம் நிலைமை மேம்படுவதற்குப் பதிலாக மோசமடைந்துள்ளது. இது பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

மலைநாட்டிலே பெரிய தொழிற் சங்கமாக இருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் பிளவுபட்டுவிட்டது. தலைமையில் ஏதோ கூட்டுக்கமிட்டி இருப்பதாகவும் இரு சங்கங்களும் ஒற்றுமையாக வேலை செய்யலாமென்றும் சொல்லப்பட்டது. ஆனால் சென்ற வாரம் ஹட்டனில் நடைபெற்ற தி. மு. க. மகாநாட்டில் ஒரு யூனியன் மட்டும் பங்குபற்றி, மற்றொரு யூனியனை ஒழித்துக் கட்டும் முறையில் தாக்கிப் பேசியுள்ளதைப் பார்க்கின்றோம். பிச்சைக் குடியிலே சனிபகவான் புகுந்தது போல், மலைநாட்டுத் தொழிலாளரிடையே பலபல போட்டி யூனியன்கள் கிளம்பி, அவர்களது மனித உரிமைப்போராட்டத்தில் அவர்களது கட்சியைப் பெரிதும் பலவீனப்படுத்துகின்றன.

ஒற்றுமையில்தான் தொழிலாளரின் பலம் தங்கி இருக்கையில், அவர்களைப் பிளவுபடுத்தும் முறையில் பல போட்டி அரசியல் யூனியன்கள் வேலை செய்கின்றன. இப்போட்டி யூனியன்களை எல்லாம் ஒன்று சேர்த்து தொழிலாளரின் ஒற்றுமையைப் பலப்படுத்தி, ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்ற யோசனையை ஒரு தொழிலாளத் தலைவரும் கூறக் காணோம். உலகத் தொழிலாளரின் ஒற்றுமை நாளான இன்றுகூட ஒற்றுமையாக தொழிலாளர் இதைக் கொண்டாட முடியாமல் போயுள்ளது பெரிய துரதிருஷ்டம். என்றுதான் இதற்கு விமோசனம் பிறக்குமே?!

தொழிலாளரிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்று கேட்பதற்குக் காரணம் முதலாளிகளை எதிர்த்துப் போராட அல்ல. முதலாளி தொழிலாளி இவர்களிடையே நல்லுறவு நிலவச் செய்தாலே தொழில் வளர முடியும். கூடுமானவரை வேலைநிறுத்தம் முதலியவை இன்றி எல்லாத் தகராறுகளையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள சட்டபூர்வமாகக் கட்டாய வழி இருக்க வேண்டும்.

தொழில் தகராறுகளை விசாரிக்க நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டும், விசாரணைகள் பல வருட காலம் நீடித்து, எளிய தொழிலாளரின் குடும்பங்கள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றன. உடனுக்குடன் தவக்கமின்றி நீதி வழங்க வேண்டும். இன்றேல் அது நீதியை தொழிலாளருக்கு மறுப்பதாகவே முடியும். இவ் விசாரணைகள் இரண்டொரு மாதங்களுக்குள் முடிந்துவிடும் படியான முறையில் சட்டம் அமைக்க வேண்டும்.

உரிமையைக் கேட்கும் தொழிலாளர் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் மறக்கக் கூடாது. கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் தானாகக் கிடைக்குமென்றார் காந்தி அடிகள். உண்மையாக உழைத்தாலே, தொழில்கள் பெருகவும், அதிகமானவர்களுக்கு வேலை கிடைக்கவும் நாடும் சுபீட்சமாக முன்னேறவும் முடியும். ஏதோ சம்பளத்துக்காக வேலை செய்கிறோமென்று அலட்சியமாக அரைகுறை வேலை செய்யாமல் மேலான தேசசேவை செய்கிறோமென்ற உணர்ச்சியுடன் உண்மையில் தொழிலாளர் உழைக்க வேண்டும். அப்படிச் செய்பவரே தங்களுக்கும் நாட்டுக்கும் உண்மையில் நன்மை செய்து கொண்டவராவர். உண்மை உழைப்புக்கு என்றும் வெற்றி உறுதி.

# மேதினி உய்யவந்த மேதினப் பொன்னாள்

## அமெரிக்காவில் ஆரம்பமான கதை

[திரு. வி. பொன்னம்பலம் எம். ஏ.]

மேதினம் என்றவுடன் தொழிலாளர் தினம் என்று பேசப்படுகின்றது. மேதினத்தின் வரலாறுபற்றி மிகத்தெளிவாக பொருளாதார இயல் ஆராய்கிறது. மேற்கு நாடுகளில் வளர்ந்த ஆலை(தொழிற்சாலைகள்) உற்பத்தி முறையின் பயனாக சமூகத்தில் இருசாரார் தோற்றினர். ஆலை உடமையாளர்கள், என்றும் அவர்களின் ஏவலாளர்கள் என்றும் வளர்ந்தனர். இவர்களே தொழிற்துறை சமூகத்தில் முதலாளி, தொழிலாளி என்றும் இருவர் சங்கங்களாக மாறுபட்ட நலன்களுடன் முரண்பட்ட சித்தாந்தங்களைக் கொண்டு வளர்ந்தனர்.

எம்மத்தியில் முதலாளி என்ற வார்த்தை அநேகமாகப் பயன்படுத்தப்பட்டபோதிலும் இது தவறாகவே குறிப்பிடப்படுகிறது. இயந்திரமுறை உற்பத்தியின் கீழ் பலநூறு தொழிலாளர்களின் உழைக்கும் திறனை ஊதியம் கொடுத்து வாங்கி ஆலைகளை நடத்தும் சொந்தக்காரர்களே முதலாளிகள் ஆவர். அதே ஆலைகளில் தமது உழைக்கும் சக்தியை சம்பளத்திற்கு விற்று ஜீவிப்பவரே தொழிலாளராவர். இங்கிலாந்திலும், ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், அண்மையில் ஆசிய ஆபிரிக்கக் கண்டங்களிலும் கூட தொடர்ந்து வளர்ந்து வரும் தொழிற்துறை இயந்திர முன்னேற்றங்களைத் தொழிற்புரட்சி என்று அழைக்கின்றோம். இது வாழ்வையும் கூட உயர்ந்த ஒரு நிலைக்கு தள்ளியுள்ளது.

ஆலைகளைச் சுற்றிப் புதிய நகரங்கள் தோன்றின. ஜனச்செறிவில் மாற்றம் ஏற்பட்டது நகரவாசிகள் தொகை பெருகியது. இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஆலை முறை உற்பத்தியை குழந்தைகள், கர்ப்பவதிகள் போன்றோர் நெடுநேரம் உழைக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சம்பளம், விடுமுறை, தொழிற் பாதுகாப்பு, 'பென்சன்' போன்ற பிரச்சினைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொழிலாளி வர்க்கத்துக்குத் தெரியாததாக இருந்தன. ஆலைகளில் சிறுவர்கள்கூட முழுநாளும் உழைக்கும் நிர்ப்பந்தம் உழைக்கும் ஸ்தலங்களைத் தொழிலாளருக்கு நரகமாக மாற்றிவிட்டது. 1815-ம் ஆண்டில் இங்கிலாந்தில் றொபேர்ட் ஓவன் என்ற அறிஞன், தொழிலாளி வர்க்கத்தின் விமோசனத்திற்குச் சட்டப்பாதுகாப்பு அவசியம் என்ற கிளர்ச்சியைத் தொடக்கினான்.

பத்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கமர்த்துவதைத் தடைசெய்யவேண்டும்; பதினைந்து வயதிற்கு உட்பட்டோரை ஒரு நாளைக்கு பத்தரை மணித்தியாலத்திற்கு மேல்வேலைக்கமர்த்தக்கூடாது; இளைஞர்களும் பெண்களும இரவில் வேலைக்கமர்த்தப்படுவது தடுக்கப்படல்வேண்டும்; என்ற கோரிக்கைகள் அவா சமர்ப்பித்த நகல்மசோதாவிற் குறிப்பிடப்பட்டிருந்தன.

எனினும் அவருடைய மசோதா பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேறத் தவறியது. ஆனால் தொழிலாளிவர்க்கம் அனுபவித்த கொடுமைகளைப் படம்பிடித்துக் காட்டியது இந்தமசோதா.

1834-ல் கிராண்ட் நாஷனல் கொன்பெடறேட்டட் டிரேட் யூனியன் என்ற தொழிற்சங்க இயக்கம் இங்கிலாந்திற்தோன்றியது. தொழிற்சங்க இயக்கம் ஆரம்பமானதும் முதலாளிமார் தமக்குக் கீழ் வேலைபார்க்கும் தொழிலாளரிடம் இருந்து எழுத்தில் தாம் தொழிற்சங்க அங்கத்தவர்கள் அல்ல என்ற கடிதங்களை நிர்ப்பந்தித்து வாங்கிக்கொண்டனர் தொழிற்சங்கத்தைப்பற்றிப் பேசுவதே அந்தக்காலத்தில் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது.

### 8 மணித்தியால கோரிக்கை

இந்த நிலைமையினின்றும் விடுதலை வேண்டும் என்ற காரணத்தால் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் ஆலைத் தொழிலாளர் 8 மணி நேர வேலை வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

1886-ம் ஆண்டு சிக்காக்கோ நகரில் உரிமைக் கொடியுயர்த்திய 2500 ஆலைத்தொழிலாளர் மீது மிருகபலம் கட்டவிழ்த்து விடப்பட்டது குண்டாந்தடி, துப்பாக்கிக்குண்டுகள் தாண்டவமாடின. அமெரிக்க நாட்டில் அன்று அங்கு உயிர்த்தியாகம் செய்த தொழிலாளர் தமது இன்னுயிர்களை உலகம் முழுமையிலும் உழைத்து வாழும் உழைப்பாளிமக்களுக்காக அர்ப்பணித்தனர். அவர்கள் சிந்திய இரத்தம் தோய்ந்த ஆடைகள் தொழிலாளி வர்க்கத்தின் செங்கொடியாக உயரப்பறக்கத் தொடங்கியது. 1889-ல் கூடிய இரண்டாவது தொழிலாளி வர்க்கத்தின் அகிலம் ஜூலை மாதம் 14-ந் திகதி கூடி மே தினத்தை உலகப் பாட்டாளி வர்க்கத்தின் பொதுநாளாகவிழாவெடுத்துக் கொண்டாடுவதென முடிவு செய்தது. இதற்கிணங்க இன்றுங்கூட உலகம் முழுமையிலும் இத்தினம் கொண்டாடப் படுவதைக் காணலாம்.

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள உழைப்பாளிகள் பின் வரும் பிரிவினர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கையிலேயே விவசாயப் பொருளாதாரம் வர்த்தக நோக்குக்காக வளர்ச்சி பெற்றிருப்பது மலைநாட்டில் தான். தேயிலைத் தோட்டங்களுள் 60 சத விகிதமானவற்றை இன்றும் கூட அந்நியர்களே உடமையாக்கி வைத்துள்ளனர். றப்பர் தோட்டங்களில் 40 சத விகிதமும் தென்னந்தோட்டங்களிலும் 20 சத விகிதமும் அந்நியஸ்தாபனங்கள் கட்டுப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இதே போல ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தையும் இலங்கையில் வளர்ந்து வரும் நுண்கலைத் தொழில்கள் அந்நிய முதலீடு பெரும் பங்கு வகிக்கின்றது.

### இனமும் வர்க்கமும்

இவர்களுடைய தொழில் ஸ்தாபனங்களில் கடமையாற்றும் தோட்டத் தொழிலாளர்கள் அலுவக, ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆகியோருள் தமிழ்ப்பேசும் இனத்தவர்களின் தொகை அதிகமாகும். இந்தப் பிரிவினைச் சேர்ந்த உழைப்பாளி மக்களுள் இந்திய வம்சாவளி வந்த இலங்கை உழைப்பாளர்கள் எண்ணிக்கையே அதிகம். ஆனால் எவ்வாறு மலை நாட்டுத் தொழிலாளர் சுரண்டப்படுகிறார்களோ அது இன மத மொழி அடிப்படையில் எழுந்த சுரண்டல் முறை அல்ல. ஆகவே தான் சிங்கள உழைப்பாளர்களுடன் இணைந்து தமிழ்ப்பேசும் தோட்டத் தொழிலாளர்களும் உரிமைப்போராட்டம் நடத்தி தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கிய தினமாகிய மே தினத்தையும் இணைந்து நின்று கொண்டாடுகின்றார்கள். கிழக்கு மாகாணத்திலும் நிலவும் நிலப் பிரவுத்துவ (கோடியார்) முறையின் கீழ் கோடியார்கள் ஆளுகிறார்கள். இக் கோடியார்கள் பல இன மொழி மதங்களைச் சேர்ந்தவர்கள். இதே போன்று இப் பண்ணைகளில் கடமையாற்றும் பண்ணை அடிமைகளும் பல இன மதப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே ஆவர். எனவே தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பண்ணைக் கூலியாட்கள் தமது நலனுக்காக மொழி அடிப்படையிலோ அன்றி மத அடிப்படையிலோ சங்கம் அமைப்பது நிகழாதது ஒன்றாகும். வடக்கிலங்கையைஎடுத்துக் கொண்டால்மூன்றுபிரதான தொழில்கள்புகையிலை, கடற்தொழில், வாழை, காய்கறி உற்பத்தி துறைகளில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர் தமது தமிழ் மொழியையே பேசும் முதலாளிகளின் கீழ் கடமை ஆற்றுகின்றார்கள்.

### உரிமைகள்

இவர்களுடைய உழைக்கும் வேலை நேரம், உரிய சம்பளம், லீவு, நஷ்டஈடு லாபத்தில் பங்கு போன்ற பிரச்சினைகளை சட்ட வரம்புக்குட்பட முதலா

(8ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன்

எழுதுவது

நேற்று நகுலேசப்பெருமான் கீரிமலைக்கு என்னை இழுத்து விட்டார். அங்கு சைவ இளைஞர் சங்கத்தார் வருட விழாவைச் சிறப்பாக நடத்தினர். முதலில் ஏட்டுச் சுவடி ஊர்வலம் கோவிலிலிருந்து புறப்பட்டது. பெண் குழந்தைகள் கோஷ்டியும் பெரியவர்கள் கோஷ்டியும், தேவார திருமுறைகளைப் பக்தியுடன் ஓதிக் கொண்டுவந்தனர். ஊர்வலமும் கூட்டமும் சிறிதாயினும் சிவமணமும் தமிழ் மணமும் நன்கு கமழ்ந்தது. சைவமும் தமிழும் அக்குழந்தைகளுடன் வளர்வதைக் கண்டேன்.

கோவில் வெளிப்பிரகாரத்தில் ஊர்வலம் செல்லுகையில் ஒரு சின்னக்குழந்தைக்குக் காலில் நெறிஞ்சி முள் தைத்துவிட்டது. அந்த எச்சரிக்கையைப் பார்த்தபின் நாங்கள் மிகக் கவனமாகச்சென்றோம்!

* * *

இரண்டு நாட்களுக்கு முன் தான் திருநாவுக்கரசரின் குருபூசை. அவர் உழவாரப் பணி செய்துவந்தார். கோவில் பிரகாரங்களிலே முள், கல், புல் பூண்டு முதலியவற்றை அகற்றித் துப்புரவு செய்வார். இன்னும் விடாமல் அந்த உழவாரப் பணியை அவர் கையில் வைத்துக்கொண்டு சைவ மக்களின் இக் கடமைகளை உணர்த்தி வருவதை அவரது திருஉருவத்தைக் கண்டால் உணரலாம்.

அவர் காட்டிய வழியிலே நடந்தால் சைவக் கோவில்களில் இவ்வளவு முள்ளுகள் இரா. துப்பரவாக இருக்கும். படித்த சைவ வாலிபர்கள் வேலையில்லை என்று காலத்தை வீணாக்குகிறார்கள். இவ்வித தெய்வப்பணி செய்தால் அவர்களுக்கும் சமயத்திற்கும் சமூகத்துக்கும் எவ்வளவு நல்லது! சைவ இளைஞர் சங்கங்கள் இதற்காக ஆங்காங்கே தொண்டர்படை அமைத்து இவ்வித சமூகப்பணி செய்தால் சமய சமூக வாழ்வு எவ்வளவுலோ மேம்படும். செய்யவேண்டிய சமூக, சமய வேலைகளோ மலைமலையாகவுள்ளன. என்றாலும் கூலிக்குத்தான் வேலை செய்வோம் என்று கூலிகளாக நம்மை மாற்றிக்கொள்கிறோம். கூலி வாங்காமல் இவ்விததொண்டு செய்தால், ஆறைவன் அருள் புரிந்து, களைகின்றித் தருவான் என்ற நம்பிக்கை நம்மில்வளர்ந்தாலே சமய வாழ்வு உண்மையில் புது மறுமலர்ச்சி பெறமுடியும்.

* * *

நேற்றுக் காலையிலே ஒரு கிறிஸ்தவாலயத்துக்கு இரு நண்பர்களுடன் சென்றிருந்தேன். எவ்வளவு சுத்தம்! என்ன ஒழுங்கு! அதைக்கண்டதும் நமது சிலகோவில்களில், பூசகர், பரிசாரகர் இவர்களது "வாடர் புரூப்" "பயர் புரூப்" ஆடைகள்தான் நினைப்பு வந்தன. ஏன் சில விக்கிரகங்களுக்குப் போட்டுள்ள துணியுமகூட, சிக்குப்பிடித்து அழுக்கே ஓர் உருவெடுத்ததுபோல இருப்பது எனக்கு ஞாபகம் வந்தது. இங்கு சில சைவக் கோவில்களில் நிலைமை மேலாக இருப்பதை நான் அறிவேன். என்றாலும், சுத்தம், ஒழுங்குமுறை இவற்றை மாதா கோவில்கள் மூலம் அறிந்து பின்பற்ற அதிக இடமுண்டு.

* * *

கீரிமலை விழாவிலே என் மனதைப் பெரிதும் கவர்ந்தவர், பண்டித சங்கரப்பிள்ளை தான். 23 வருடங்களாக அங்கு இச்சங்கம் அமைத்து அரியபணி செய்துவருகின்றாரம் பிள்ளை அவர்கள். வயது வளர்ந்தாலும் அவர் என்றும் வாலிபரே! 'ஔவையார்' ஆன

(8ம் பக்கம் பார்க்க)

# "திட்டமிட்டு வாழ்க்கை நடத்தவேண்டும்"

## தோட்டத்தொழிலாளருக்கு சிவபிருந்தாதேவி அம்மையார் புத்திமதி

நாவலப்பிட்டி, திங்கள்

தொழிலாளப் பெருமக்கள் சீரான முறையில் நேரான பாதையில் வாழவேண்டுமென விரும்பினல் வருவாய்க்குத் தக்க திட்டமிட்டு வாழ்க்கையை நடத்த வேண்டும். தாய்நாட்டிலிருந்து வந்த எனது பணிவான வேண்டுகோள் இது.

இவ்வாறு சகோதரி சிவபிருந்தாதேவி அம்மையார் இங்கு நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது கூறினர்.

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினரால் அம்மையாருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. கண்டியிலுள்ள நூதனசாலை, சச்சிதானந்த தபோவனம், பேராதனை பூந்தோட்டம, பல்கலைக் கழகம் முதலான இடங்களையும் அவர் பார்வையிட்டார்.

தொளஸ்பாகை தாமரவல்லியிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சிவபிருந்தாதேவி அம்மையார் கூறியதாவது:-

ஆன்மா லயிக்கும் இடம் ஆலயம்! துன்பத்தில் உழலும் மக்கள் மகிழ்ச்சி சாந்தி பெறுவதற்காகவே பெருமகள் ஆலயம் எடுத்தனர். ஆண்டவனை வழிபட்டால் கட்டுக் கவலைகள் நீங்கிவிடும். உள்ளத்திலும் ஆண்டவன் இருக்கிருர் என்ற உணர்வுடன் சென்று வழிபட்டால் தான் ஆலயத்திலும காணமுடியும்.

சிவனடியைச் சேர்ந்திருந்த காரணத்தால் அப்பர் சுவாமிகள் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'.

சமயப் பண்பாட்டைப் புரிந்து கொள்ளாத காரணத்தினலும், மூடப்பழக்க வழக்கங்களினலும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை சோபிக்கவில்லை. ஆண்டவன் ஒருவர் உண்டு என்ற அசையாத நம்பிக்கை வேண்டும். தேவார திருவாசகங்களை ஓதி கூட்டுவழிபாடு செய்து அன்பும் அறனும் கடைப்பிடித்து பண்பும் பயனும்பெற வாழ வேண்டும்.

கொத்மலையிலுள்ள வெலஸ்ரேல் தோட்டக் கூட்டமொன்றில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. ? முத்தையா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சகோதரி சிவபிருந்தாதேவி அம்மையார் கூறியதாவது:-

முற்போக்கு வாதிகள் திருக்கோவிலில் சென்று ஏன் வழிபட வேண்டும் என்கின்றனர். பசுவின் உடம்பு முழுவதும் பால் இருந்தாலும் கொம்பில் பிடித்து இழுத்தால் வருமா? மடியைப் பிடித்து இழுத்தால் தானே பால் வரும். அதுபோல்தான் பரம் பொருள் எங்கும் நிறைந்து இருப்பினும் திருக்கோவிலில்தான் அருள் பாலிப்பார். ஆண்டவன் தூரத்தில் இல்லை. அழுதால் உன்னைப் பெறலாமே என்றுர் மணிவாசகர். நால்வர் காட்டிய வழியைப் பின்பற்றினல் நமக்கும் விமோசனம் உண்டு.

---

மேற்கு நியூகினி

# ஐ. நா.வுடன் ஒப்பந்தம் செய்யத் தயார்

## யுதாண்டுக்கு டச்சு அரசாங்கத்தின் அறிவிப்பு

ஐ. நா. (நியூயோர்க்) ஏப். 30

மேற்கு நியூகினியில் ஐ. நா. மேற்பார்வை ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள விரும்புவதாய் தலைமைக் காரியதரிசி திரு. யு. தாண்டிடம் டச்சு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. விலுள்ள டச்சுப் பிரதம பிரதிநிதி திரு. வி. ஏ. ஸ்குர்மான், இவ்வித ஒப்பந்தம் ஒன்று செய்து முடிக்க ஏற்பட்டபின், அங்கு துருப்புக்கள் அனுப்புவதை டச்சு அரசாங்கம் நிறுத்திக்கொள்ளும் என திரு. யு. தாண்டிடம் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா இவ்வொப்பந்தத்தை ஏற்குமானல் ஐ. நா. மேற்பார்வையாளர்களை அங்கு அனுப்பமுடியுமா என அவர் தலைமைக் காரியதரிசியிடம் கேட்டார்.

டச்சு அரசாங்கம் மேற்கு நியூகினிக்கு துருப்புக்களை அனுப்புவதை நிறுத்தாவிட்டால்பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்த முடியாது என டாக்டர் சுகர்ணே கூறியிருந்ததை அடுத்து இவ்வித யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடுநிலைமை பார்வையாளர்கள் அங்கு அனுப்பப்பட வேண்டும் என டச்சுப் பிரதிநிதி வற்புறுத்தியிருக்கிருர்.

## வெள்ளிவிழாவும் அந்தர் யோகமும்

நாவலப்பிட்டி, திங்கள்

திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளி விழாவும், அந்தர் யோகமும் கண்டி தென்னக்கும்பர சச்சிதானந்த தபோவனத்தில் மே மாதம் 18, 19, 20-ம் திகதிகளில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வெள்ளி விழாவைபவம் 19-ம் திகதி மாலை 3 மணியிலிருந்து 9 மணிவரை நடைபெறும் எனத் தெரிகிறது. இவ் விழாவில் யோகாசனப் போட்டிகள், பேச்சுப் போட்டிகளும் நடைபெறுமெனத் தெரிகிறது.

## ஜாப். விருந்தை பகிஷ்கரித்தனர்

பாக்தாத், ஏப்ரல் 30

பாக்தாத்தில் ஜப்பானியத் தூதர் அளித்த விருந்தை ஈராக் மந்திரி சபையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பகிஷ்கரித்துவிட்டனர். குவாய்த் சம்பந்தமாக ஜப்பான் நடந்துகொண்ட ஒரு விஷயத்தை முன்னிட்டே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

## பார்லிமெண்டில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பதாகவும் தெரிவித்திருத்தார். இந்நிலைமையின் கீழ் பொலிஸாரால் விசாரணை நடைபெறுவது சாத்தியமாகாது.

(ஆ) நடைபெறவிருந்த விசாரணையில் திரு. சிவபாதசுந்தரம் சமுகம் கொடாதிருந்தமையால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் துன்புறுத்தப்பட்டவர்களா என்பதற்குப் போதியளவு சாட்சியங்கள் கிடைக்கவில்லை. திரு. சிவபாதசுந்தரமும் மற்றும் 8 பேர்களும் வழிப்பறி' காயப்படுத்தியது, சட்டவிரோதமாகக் கூடிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டதுடன் வவுனியா மாஜிஸ்டிரேட் கோர்டில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) இது சம்பந்தமாக வாக்குமூலம் எதுவும் கிடையாது.

(2) பிரச்னை எழவில்லை.

(3) வழக்கு முடிந்ததும் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி தீர்மானிக்கப்படும்.

திரு. பி. பீ. விக்கிரமசூரியா:-

(1) உப-காரியாலயங்களுக்குப் பொறுப்பாக எத்தனை கல்வி அதிகாரிகள் அமர்த்தப்பட்டிருக்கிறர்கள்?

2. எத்தனைபேர் பட்டதாரிகள்?

3. பட்டதாரிகளல்லாதவர்களுடைய பெயர்கள் என்ன?

இக்கேள்விக்குப் பதிலளித்த உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்தின கூறியதாவது:-

1. இரண்டு
2. இரண்டு
3. எழவில்லை

ஜனுப் என. எச். எம். நைனு மரைக்கார் புத்தளம

1. இளம் விவசாயிகள் சங்கம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட பிரசுரங்கள், அத்தாட்சிப் பத்திரங்கள் போன்றவைகளின் அடையாளச் சின்னம் யானை ஆக இருந்தபடியால் 1956ம் ஆண்டில் எம். ஈ. பி. அரசாங்கம் பதவி ஏற்றதும் மேற்படி பிரசுரங்களை வாபஸ் பெற்றதைப்பற்றி அறிவாரா?

2. வாபஸ் பெறப்பட்ட பிரசுரங்களின் பெறுமதி என்ன?

விவசாய, காணி நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு. ஸி. பி. டி. சில்வா பதிலளிக்கையில் கூறியதாவது:-

1. ஆம். ஆனல் இந்தமாற்றத்துக்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் கிடையாது. விவசாயத்துக்கு முற்றும் பொத்தமான சின்னத்தைக் கொண்டு யானைச் சின்னம் மாற்றப்பட்டது. மாற்றம் பிரச்சாரத்துக்கும் பெரிதும் உதவுகிறது.

2. 1954ம் ஆண்டில்தான் முதல் அத்தாட்சிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டன. இதில் எஞ்சியிருந்தவை வல்பிட்ட பெண்கள் கிருஷிக பாடசாலைக்கு பாவைகள் செய்வதற்காக அனுப்பப்பட்டன. உருமாறிப்போன இவைகளின் மதிப்பை இப்போது தெரிவிப்பது சாத்தியமாகாது.

## செவ்வாயில் தண்ணீர்!

மாஸ்கோ, ஏப்ரல் 30

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதாயும், இது பனிக்கட்டி உருவத்தில் இருப்பதாயும் தாம் நிரூபித்துள்ளதாய் ஒரு ரஷ்ய விஞ்ஞானி கூறியுள்ளார்.

இந்த விஞ்ஞானி, லெனின் கிராட்டுக்கருகில் புலிகோவோ அவதான நிலையத்தைச் சேர்ந்தவராகும். 1954, 1956, 1961 ம் ஆண்டுகளில் செவ்வாயககிரகம் பூமிக்கருகில் இருந்தபோது தாம் இதை ஆராய்ந்தறிந்ததாய் அவர் "டாஸ்" செய்திஸ்தாபனத்திடம் கூறினர்.

# தோட்டத் தொழிலாளருக்கு மேதினவிடுமுறை

## சம்பளத்துடன் அளிக்க கோரும் தீர்மானம்

### இன்று இ. தொ. கா. மேதின கூட்டத்தில் நிறைவேறும்

நாவலப்பிட்டி, செவ்வாய்

மேதினத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறைத் தினமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று இன்று நுவரெலியாவில் நடைபெறவிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

மலைநாட்டில் மேதின விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒழுங்கு செய்திருக்கும் மேதின விழா நுவரெலியாவில் நடைபெறுகிறது. இவ் விழாவில் தொண்டர், மாதர் அணிவகுப்பு, தேசிய விளையாட்டுக்கள், ஆடல் பாடல்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

வாழ்க்கை அலவன்ஸ் ரூ 17-50, குடியிருப்பு வசதி, தோட்டச் சிறுர்களின் கல்வி வசதி, பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் நவீனவசதிகளுடன் அமைத்தல் முதலான பல தீர்மானங்களும் இ. தொ. காங்கிரஸ் மேதினக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கின்றன. தோட்டக் கமிட்டிகளும் மேதினவிழாவைக் கொண்டாட ஒழுங்குகள் செய்திருக்கின்றன.

# "தமிழர்பிரச்சினையைத் தீர்க்க அரசியல்கட்சி கிடையாது"

## திரு. ஸி. பொன்னம்பலம் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய அரசியல் கட்சி எதுவும் இன்று தமிழ்ப் பகுதிகளில் கிடையாது" என்று முன்னுள் யாழ்ப்பாண மேயர் திரு. ஸி. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் சிவியாதெரு சனசமூக நிலையத்தின் 13-வது வருடாந்த கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தமிழ்ப் பகுதிகளில் ஒரு அரசியல் கட்சி யாவது இன்று கிடையாது; புதிய கட்சியெதுவும் உருவாகும் உத்தேசமும் இல்லை.

சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக வாழ்வதில்தான் வேற்றுமைகள் நீங்கி, ஐக்கிய இலங்கையர் சமுதாயம் உருவாக முடியும் இதன் மூலம்தான் அமைதியான முறையில் தமிழ்ப பேசும் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### சிறுபான்மையினரும் இலங்கையரே

சிறுபான்மை மக்களும் இலங்கையர்கள்தான் என்பதை இலங்கையின் பெரும்பான்மையினராகியசிங்களசமூகம் உணர வேண்டும். சிங்கள தேசியம் பற்றி அவர்கள் பேசக்கூடாது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்று மிக அவசியமான ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு இதர சமூகத்தினருக்கு அவர்களுக்குரிய மரியாதையை பெரும்பான்மைச் சமூகத்தினர் கொடுக்க வேண்டும்.

### தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் இடம்

தேசிய சிறுபான்மை இனமான தமிழரின் தமிழ் மொழிக்கும், இணைப்பு மொழியாகவும் சர்வதேசமொழியாகவும் விளங்கும் ஆங்கிலத்துக்கும் சிங்கள மொழியுடன் அந்தஸது வழங்குவது நியாயமாகும்.

இலங்கையின் இன்றைய குழப்பமான நிலைமைக்கு இரு பககத்திலுமுள்ள அரசியல் சந்தர்ப்பவாதிகள் தான் காரணம். நாட்டின அரசாங்கத்தை சரியான மார்க்கத்தில் வழிநடத்தவேண்டியது நிதான புத்தி படைதத தலைவர்களின் முக்கிய கடமையாகும்.

### சமஷ்டியினர் சாதித்தது என்ன?

சமஷ்டிக் கட்சியினர் தமிழ் மக்களுக்கு ஒன்றும் இதுவரை செய்ய வில்லை. தமிழ் மக்களின் உரிமையைப் பெறுவதற்கு சமஷ்டிக் கட்சியினர் பார்லிமென்டில் என்ன செய்தனர். பொருளாதாரத்துறையில்தான் என்னத்தைச் சாதித்தனர்?

தமிழ் மக்களை சமஷ்டிவாதிகள் ஐக்கியப்படுத்தவேண்டும். சிறுபான்மைத் தமிழருக்கு இழைக்கப்படும் தீமைகளை அவர்களால் நீக்கமுடியவில்லை. சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளின் பாதுகாவலர்கள் என்று சமஷ்டியினர் பெருமையடித்துக் கொள்கின்றனர். ஒருசிலரைச் சமாதான நீதவான்களாக்கியதைத்தவிர சிறுபான்மைத் தமிழருக்கு அவர்கள் வேறெதுவும் செய்யவில்லை.

---

லண்டன், ஏப்ரல் 30

டஸ்மானியா கவர்னர் ரோவலன் பிரபுவின் புதல்வர் திரு. ஆர்தர் கோர்பட் முன்பு ஆணையிருந்தவரும், லண்டனைச் சேர்ந்தவருமான ஒருவரை மணக்கவிருக்கிறர்.

42 வயதான திரு. கோர்பட் இவ்விஷயத்தை "ஈவினிங் ஸ்டாண்டர்ட்" நிருபரிடம் கூறினர்.

ஏப்ரல் அஷ்லி என்ற 27 வயதான அழகியே அவர் மணக்கவிருக்கும் பெண்.

செல்வி அஷ்லி, ஒரு பஸ்கண்டக்டரின் புதல்வி. 1960-ம் ஆண்டில் இவருக்கு ஆபரேஷன் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பூரண பெண் ஆனர்.

"நான் அறிந்ததிலேயே மிகவும் சிறந்த பெண்" என திரு. கோர்பட் தம் வருங்கால மனைவியைப்பற்றிக் கூறினர். தனது முன்னைய மனைவியை விவாகரத்துச்செய்தபின் அவர் அஷ்லியை மணப்பார்.




# கல்விச் செல்வம்

—செல்வி அமீனு—

"கல்வியாற் பெரியன் கம்பன்," "கல்வியிற் பெரியனுயினன்" என்னும் சொற்றொடர்களை நாம் கேட்டிருக்கிறோம். இவை நமக்குக் கல்வியின் பெருமையை எடுத்தியம்புகின்றன. செல்வங்களெல்லாவற்றுள்ளும் கல்விச் செல்வமே நிலையானது. மற்றும் பொருட் செல்வங்களும் பிறவும் அழியும் தன்மையன.

நாங்கள் அறிவைப்பெருக்க நூல்களைப்படிக்கிறோம். ஆனல் நூல்கள் என்றால் கண்ட கண்ட நூல்களைப்படிப்பதல்ல. கற்கத் தகுந்த நூல்கள், கற்கத்தகாத நூல்கள் என்று வகுக்கப்பட்டுள்ளது. அவற்றை ஆராய்ந்து, நாம் வேண்டாத நூல்களை விடுத்து அறிவைப் பெருக்குதற்கேற்ற, செவிக்கின்பம் பயக்கும் நூல்களை நாம் கற்றால் மிக்க பயனடைவோம். அஃதன்றி வேண்டாத நூல்களைக் கற்பதால் காலமும் நேரமும் வீணுகுவது மல்லாமல் அதனல் நமக்கு எதுவித பயனுமில்லை.

நாம் சிறந்தது எனத் தேர்ந்தெடுக்கும் நூல்களை நன்கு கற்கவேண்டும். அதிலும் 'நுனிப்புல்'மேயக்கூடாது. அதனை ஆழ்ந்து கற்கவேண்டும். ஆகவே கற்ற நூல்களைப் பழுதறக் கற்று, கற்றற்கு அமைய வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே வள்ளுவரும்:

"கற்க கசடற கற்பவை—
கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்றார். உலகத்தில் வாழும் உயிர்க்கு இரண்டு கணகளும் எத்துணை இன்றியமையாதது. கண்பார்வை இல்லையேல் வாழ்ந்து தான் என்ன பயன். இக்கண்களால் நாம் இன்று நடப்பவைகளையும், உள்ளவைகளையுமே காணலாம். ஆனல் மேல் நாடுகளையோ, அன்றி அங்கு நடைபெறும் அரிய நிகழ்ச்சிகளையோ காண்பதற்கு இவ்விரு கண்களும் போதாது அவற்றை அறிய என்றும் துணைநிற்பது அறிவுக் கண்ணே. ஆகையால் கற்றோரே கண்ணுடையவர் என்று சொல்ல வேண்டும் இதனையே வள்ளுவரும் வலியுறுத்துகின்றார்.

# என்ன விநோதம்

— அ. டேவிற் இராசையா —

நமது உடலில் காயங்கள் ஏற்படுகின்றன. அந்தக் காயங்களை "அயடின்", என்னும் மருந்தை தடவித் சுகப்படுத்துகின்றோம். இந்த "அயடின்" எங்கேயிருந்து கிடைக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. இந்த "அயடின்" என்னும் மருந்து கடல் நீரிலிருந்து எடுக்கப்படுகிறது. ஒருமைல் நீளம் ஒரு மைல் அகலம் ஒருமைல் ஆழம் உள்ள கடல் நீரிலிருந்து 180,000,000 ரூபாய் பெறுமதியுள்ள "அயடின்" எடுக்கலாம்.

நாம் பேப்பரில், மையினல் பல சிறு கதைகளையும் கவிதைகளையும் கட்டுரைகளையும் வரைகிறோம். வீட்டில் உள்ள அழுக்குப் படிந்த மேசைகளையும் நாற்காலிகளையும் அலுமாரிகளையும் "வார்னிஸ்", என்னும் ஒருவகை எண்ணெயைப் பூசி பளிங்கு போல் மினுங்கச் செய்கிறோம். இந்தப் பேப்பர் மை, வார்னிஸ் ஆகியவை "சோயா-பீன்ஸ்"என்ற பொருளிலிருந்து செய்யப்படுகின்றன. இந்தச் "சோயா-பீன்ஸை," இற்றைக்கு கிட்டத்தட்ட ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சீன மக்கள் உணவாகக் கொண்டனர். இந்தச் சோயா-பீன்ஸிலிருந்து பலவகையான உணவுவகைகளையும் செய்தனர்.

நாம் காப்பியைப் பெரிதும் விரும்பிப்பருகுகிறோம். இந்தக் காப்பிச் செடியை வெள்ளைக்காரர்கள் ஈழத்தில் பயிரிட்டார்கள். ஆனல், அரேபியாவில்தான் காப்பி முதன் முதலில் பயிரிடப்பட்டது. இன்று காப்பிச்செடி அபிசினியக் காடுகளில் மிகுந்து வளர்கிறது. பிரேசில் என்னும் தேசத்தில் அபிசினியக் காடுகளில் விளையும் காப்பிச் செடிகளைவிட மிகுந்து விளைகிறது. பிரேசில் தேச மக்கள் காப்பிக்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கின்றனர். இன்னும் "காபின்" என்னும் வஸ்துவையும் இந்தக் காப்பிக் கொட்டையிலிருந்து எடுக்கின்றனர்.

உண்மையிலேயே நமக்கு இவையெல்லாம் விநோதம் தானே!

# சந்தேகம் தீருங்கள்

ஜி.எம்.

எஸ். பத்மாசனி, யாழ்ப்பாணம்.
கேள்வி: சிறந்த ஓவியர்களில் ஒருவரான ரவிவர்மா எங்கு எப்போது பிறந்தார். எந்த ஆண்டில் காலமானுர்?
பதில்: ரவிவர்மா கேரளத்தில் 1848ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ந் திகதி பிறந்தார். 1906ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ந் திகதி காலமானுர்.

க. ஜெகதீசன், பளை.
கேள்வி: உருளைக்கிழங்கின் தாயகம் எது?
பதில்: அமெரிக்காவில் சிலி, பெரு, மெக்சிகோநாடுகளிலுள்ள மேட்டுப் பிரதேசமே உருளைக்கிழங்கின் தாயகமாகும்.

இ. தர்மலிங்கம, ஆ. நா. சுந்தரலிங்கம், நெடுந்தீவு.
கேள்வி: முதன்முதல் எத்தனையாம் ஆண்டு; எங்கே வேலை நிறுத்தம் ஆரம்பமானது?
பதில்: 1886ம் ஆண்டு மே மாதம் முதலாந்திகதி வடஅமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரத்திலும், அமெரிக்காவின் ஏனைய முக்கிய நகரங்களிலும் வேலை நிறுத்தம் முதல் ஆரம்பமானது. ஆமாம்...இன்று மேதினமல்லவா?

அ. கனகசூரியர், பொ. ஜெயபாலன், ஊரெழு.
கேள்வி: செவ்விந்தியர்கள், நிலத்தில் படுத்திருந்து தூரத்தில் வரும் எதிரிகளை அறிந்துகொள்ளுகிறார்கள். எப்படி?
பதில்: அவர்களுக்கு விசேஷ காதுகள் எதுவும் இல்லை.ஆனல் நிலத்தில் படுத்திருப்பதன் மூலம் அதாவது, காதைநிலத்துடன் வைப்பதன்மூலம், தூரத்தில் வருபவர்களை அறிய முடியும். வளியைக்காட்டிலும் நிலத்தில் ஒலி வேகமாகச் செல்லுகிறதாம்.

பே. துரைசிங்கம், மயிலிட்டி.
கேள்வி: வௌவால் ஏன் தலைகீழாகத் தொங்குகிறது?
பதில்: வௌவாலின் பின்னங்கால்கள் முன்னங்கால்களைவிட நீளமாக இருக்கிறது. முன்னங் கால்களில் இறக்கைகள் இருப்பதால் அது தொங்குவதற்குப் பயன்படமாட்டா. பின்னங்கால்களினல் பிடித்துத் தொங்குவதனலேயே வௌவால் தலைகீழாகத் தொங்குகிறது.

செ. சத்தியமூர்த்தி, பிரம்படி, கொக்குவில்.
கேள்வி: 'ஈழநாடு' பத்திரிகை பிறநாடுகளுக்கும் அனுப்பப்படுகிறதா?
பதில்: ஆம்.

# நண்பனின் கடிதம்: 5

ராஜாவுக்கு!

பாடசாலை மணி அடிக்கும் நேரத்தில், நீ அவசரமாக எழுதிய கடிதத்தில் உனது தாராள மனப்பான்மையைக் கண்டு பாராட்டுகிறேன். எனினும் உனது உயரிய சிந்தனைகள் ஒருவகையில் முரண்பாடு உடையனவாக மனக்குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன. சமத்துவத்தைப் பற்றியும், சுதந்திரத்தைப் பற்றியும் போதித்த நீ உடனடியாக அரசனுக்கும் அறிவாளிக்கும் உள்ள ஏற்றத்தாழ்வைக் குறித்து எழுதியது ஏனோ? மேற்கொண்டு "ஏற்றத்தாழ்வுகள் மறையும் போதுதான், திருப்தியான முன்னேற்றம் அடைகின்றான் மனிதன்' என வாதாடுகிறாய்.

இதிலிருந்து நான் அறிவது யாதெனின், நீ ஒருவகையான ஏற்றத்தாழ்வை எதிர்க்கிறாய். ஆனல் அதே நிலையில்வேறொரு வகையான ஏற்றத்தாழ்வை ஏற்கிறாய் என்பதேயாகும். இதை இன்னும் விளக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன் பொருட் செல்வத்தினல் ஏற்படும் உயர்வு தாழ்வு உனக்குப் பிடிக்கவில்லை. ஆனல் அறிவுச் செல்வத்தினல் உண்டாகும் தாரதம்மியம் உனக்கு விருப்பமாயிருக்கிறதுபோலும்.

உனது கடிதத்தை எனது உளநூல் ஆசிரியரிடம் காட்டினேன். தாழ்வு மனப்பான்மை மிகுதியால் நீ அவ்விதம் எழுதியிருப்பதாக அவர் கூறுகிறார் தமிழ் இலக்கிய ஆசிரியரிடமும் காட்டினேன். அவர் "இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு; தெள்ளியராதலும் வேறு" எனக்கூறி மௌனம் சாதித்தார். ராஜா! இலக்கிய ஆசிரியர் கூறிய இத்திருக்குறளை நீ நன்கு உணர்ந்து ஒழுகுவாய் எனின் நமது கடிதத் தொடர்பு இன்னும் நீடிக்கும் என நம்புகிறேன். தாழ்வு மனப்பான்மைக்கு இடம் கொடாதே.

அன்பு நண்பன்,
பாலா.

[எழுதியவர்: செ. பாலகௌரி,
41, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.]

**இக்கடிதத்துக்குரிய பதிலை எவரும் எழுதியனுப்பலாம். கருத்துள்ள கடிதம், அடுத்த வாரம் வெளியாகும்.**

# விஞ்ஞானம்

இடவசதியின்மையால் "விஞ்ஞானம்" தொடர் கட்டுரை இவ்வாரம் வெளியாகவில்லை. அடுத்த வாரம் முதல் வெளியாகும்.

மதிப்புரை

# தங்கத்தாமரை

இக்காலத்தில் நம்நாட்டுக் குழந்தைகளில் பலர் தங்கள் பாட்டன் பாட்டியாரிடம் கதைகள் கேட்டு மகிழ்வதைவிட்டு குழந்தைப் புத்தகங்களையும், பாடல்களையும், சிறுவர் பத்திரிகைகளையும் படித்துச் சுவைப்பதில் எல்லையற்ற இன்பம் அடைகிறார்கள். அதிலும், ராஜாராணிக் கதைகள், பூதங்களின் கதைகள், மிருகங்களின் கதைகள், கள்வர்கள் கதைகள் என்றால் குழந்தைகளுக்கு அலாதி பிரியம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டுக் கதைப்புத்தகங்களை வாசித்து நம் நாட்டிலும் குழந்தைக் கதைகள் வெளிவரமாட்டாதா என்று எண்ணிய பல குழந்தைகளின் ஆசையை, 'தங்கத்தாமரை' மூலம் செல்வி இந்திராணி மார்க்கண்டு நிறைவேற்றியிருக்கிறார். நல்ல முயற்சி. ஈழத்தில் குழந்தைக் கதைகளில் முதலாவது வெளியீடாக 'தங்கத்தாமரை' மலர்வதை மனதாரப் பாராட்டுகின்றோம்.

கையெழுத்துப் பிரதியாக கிணற்றுத் தவளைபோல் இருந்ததை சுடர்விடும் தங்கத் தாமரையாக எழுத்தாளர் டொமினிக்ஜீவா பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். தங்கத் தாமரையில் வெளியாகியிருக்கும் கதைகளில் வெண்சங்கு, கூண்டு, எட்டுக் கிரகங்கள், மனமாற்றம், தங்கமாம்பழம் ஆகியவற்றில் தேன் சொட்டுகிறது.


கதைகள் கட்டுக்கோப்பாக அமைந்துள்ளன. விறுவிறுப்பாகச் செல்கின்றன. ஓட்டத்தில் தடையே இல்லை. எளிய

(7-ம் பக்கம் பார்க்க)

2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)
நியூசினிமா (குருணகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

மனுேரா (யாழ்ப்பாணம்)
ரஞ்சன் — ராஜசுலோசனு
நடித்த
ராஜா மலயசிம்மன்

# பூ நகரி கொலைமுயற்சி வழக்கு மீண்டும் விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரம் படுத்தப்பட்டிருந்த பூநகரி கொலை முயற்சி வழக்கில் மேல் விசாரணை செய்யும் படி அட்டர்ணி ஜெனரல் கொடுத்த கட்டளையின் மீது யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் பூநகரியைச் சேர்ந்த இராமநாதி பெண் செல்லம்மாவுக்கு நச்சுத்திராவகம் கலக்கப்பட்ட பால் கோப்பியை கொடுத்து கொலை செய்ய எத்தனித்ததாக அதே யிடத்தைச் சேர்ந்த நடராசா பெண் பொன்னம்மா மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பு உதவி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சந்திரா அமரசேகரா சாட்சியமளிக்கையில் தெரிவித்தாவது:-

வழக்காளியைப் போன்ற உடலமைப்புள்ள பெண்களுக்கு இந்தக் கோப்பியில் கலக்கப்பட்ட 'டீல்டிரின்' என்ற கிருமி நாசினி இரண்டரைக் கிராம் கலக்கப்பட்டால் உடன் மரணத்தைக்கொண்டுவரும். கொடுக்கப்பட்ட கோப்பியில் அரைப்பங்கு அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பப் பட்டிருந்தது. அதற்குள் காணப்பட்ட கோப்பியின்படி முழுக் கோப்பியிலும் 1. 2 கிராம் 'டீல்டிரின்' கலக்கப்பட்டிருந்தது. இதைக் குடித்திருந்தால் மரணம் சம்பவிக்கமாட்டாது. ஆனால் மயக்கமும், வாந்தியும், வலியும் ஏற்படும்.

பூநகரி உடையார் ஆறுமுகம் சதாசிவம் சாட்சியமளிக்கும் போது கூறியதாவது:-

23-8-60ல் பூநகரி ஆஸ்பத்திரியிலிருந்து கிடைத்த அறிவித்தலின் படி விசாரணைக்குச் சென்றிருந்தேன். செல்லம்மா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தார். ஆஸ்பத்திரிக்கு அப்போது பொறுப்பாயிருந்த அப்போதிக்கரி 'கிளாசில்' முக்கால் பங்கு உள்ள கோப்பியிருக்கக் காண்பித்தார். எனது முன்னிலையிலேயே அதில் அரைப்பங்கை ஒரு போத்தலுக்குள் அடைத்து பரிசோதனைக்கு அனுப்பினர். மிகுதி அரைப் பங்கை என்னிடம் ஒப்படைத்தார்.

"டீல்டிரின்" பூநகரிப் பகுதியில் நெற்பயிருக்குத்தெளிக்கும் கிருமிநாசினியாகும் விசாரணையின்போது எதிரிபொன்னம்மா செல்லம்மாவை வருத்தம் பார்க்க வந்ததாகவும் அப்போது செல்லம்மாவுக்குக் கொடுப்பதற்காக இக் கோப்பியைக் கொண்டுவந்தார் என்றும் செல்லம்மா போத்தல் மூடியைத் திறந்தபோது வித்தியாசமான வாடை வீசியதால் அதைக் குடிக்காது அப்போதிக்கரியிடம் போத்தலை ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

திரு. எஸ். ஸ்ரீநிவாசனும் சாட்சியமளித்தார்.

## சுபாஸ் கழகம் வெற்றி

வவுனியா, திங்கள் வவுனியா விவசாய கைத்தொழில் பொருட்காட்சியில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் பல கோஷ்டிகளை வெற்றி பெற்ற றேமஸ் சன சமூகநிலைய கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் சுபாஸ் கழக கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கு மிடையே நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சுபாஸ் கழகம் றேமஸ் கோஷ்டியை தோற்கடித்து வெற்றி பெற்றது.

மத்தியஸ்தராக திரு. எஸ். இராசலிங்கம் கடமையாற்றினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

செவ்வாய் 1-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 மேதின விசேஷ நிகழ்ச்சி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 குரல்வகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கலைஏடு, 9-45 எம். பஞ்சாபிகேசன் - நாகஸ்வரம்.

## லாவோஸ் தலைவர்கள்

வியன்டைன், ஏப்ரல் 30 தாய்லாந்துக்குச் சென்றிருந்த லாவோஸ் அரசாங்கத் தலைவர்கள் நேற்று வியன்டைன் திரும்பினர்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 ராமநாதபுரம் அலுமேலு திருமலை - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 ராமநாதபுரம் அலுமேலு திருமலை — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம், 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-00 மலரும் வாழ்க்கை - பேச்சு, 7-45 மாயூரம் எஸ். ராஜம் - பாட்டு, 9-15 "கால்யணிநேரம்" - நாடகம், 9-30 நாட்டுப் பாடல்கள், 9-50 இசை ஏடு - சஞ்சிகை நிகழ்ச்சி.

## புளியங்கூடல் முத்துவிநாயகர் உற்சவம்

ஊர்காவற்றுறை, திங்கள் சரவணையைச் சேர்ந்த புளியங்கூடல் ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் சென்ற புதன்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

வேலணைத் தீவில் சைவ ஆலய வருடாந்த உற்சவத்தை முதலில் ஆரம்பித்து வைக்கும் இவ்வாலயத்தில் உற்சவ நாட்களில் தினமும் சமய சம்பந்தமான 'சொற்பொழிவுகள்' நடைபெற்று வருகின்றன.

எதிர் வரும் வியாழக்கிழமை நடைபெறும் தேர்த் திருவிழாவை அடுத்து தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

## தங்கத்தாமரை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ், கதைகளுக்கு ஏற்றமளிக்கின்றது. முடிவில்... குழந்தைகள் நெஞ்சைத் 'தங்கத்தாமரை' கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமே இல்லை.

— 'மான்'

## வானவெளி ஆராய்ச்சி மகாநாடு

வாஷிங்டன், ஏப். 30 வாஷிங்டனில் இன்று ஆரம்பமாக விருக்கும் சர்வதேச வானவெளிப் பிரயாண ஆராய்ச்சி சம்பந்தமான மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக சோவியத் யூனியன் தூது கோஷ்டி வாஷிங்டன் வந்து சேர்ந்தது. சோவியத் வானவெளி வீரர் டிட்டாவும் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வார்.


## நியுயோர்க்கில் மேனன்

நியுயோர்க், ஏப். 30 ஐ. நா. பாதுகாப்புச்சபையில் காஷ்மீர் பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொழுது இந்தியக்கோஷ்டிக்குத் தலைமை தாங்குவதற்காக இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் நியுயோர்க்வந்து சேர்ந்தார்.

நிருபர்களிடம் எதுவும் கூறுவதற்கு மறுத்த திரு. மேனன் சொல்ல வேண்டியதையெல்லாம் பாதுகாப்புச் சபையில் சொல்வதாகக் கூறினர்.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் ... யிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ... நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் ... மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், ... இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்களே தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளுமையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல ... டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# "பொருளாதார நோக்கத்துடன் பலியிடுதல் கூடாது"

## சைவ இளைஞர் மகாசபை கூட்டத்தில் பேச்சு

கீரிமலை, திங்கள்

"சைவ ஆலயங்களிலே பலியிடுதல் கூடாது என்று கூறுவது சைவக் கொள்கைக்கு முரணானது. சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளை உணராமையே இவ்வாறு கூறுவதற்குக் காரணமாகவுள்ளது. பலியிடுதல் என்பதனை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இறைவனுக்கு நமது அர்ப்பணமாகச் செய்யப்படும் பலியிடுதலைத் தடுத்தல் கூடாது. பலியிடுதல் சைவத்திற்கு உடன்பாடானது. ஆனால் பலியிடுதல் பொருளாதார நோக்கில் நடத்தப்படுவது கூடாது."

இவ்வாறு பண்டிதர் வ. கந்தையா கீரிமலை ஸ்ரீவைத்திலிங்க மடத்தில் நேற்றிரவு ஆரம்பமான அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் இருபத்திரண்டாவது வருடாந்த மகாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சமயத்திலே புதுமை சகோதரத்துவம், பொறுமை கலந்ததாக இன்றைய சமயப் பிரசங்கங்கள் அமைகின்றன. இதனால் உண்மையான சமயத்தை உணர முடியாது போய்விடுகிறது. ஆன்ம ஈடேற்றத்திற்குரிய உயர்ந்த நிலையே சமயம். மனிதர்களாக பிறந்த அனைவர்க்கும் வழிபாட்டு முறை உண்டு. முறையான கல்வி இந்நாட்டிற்கு வேண்டும். சமயபாட நூல்களை விளக்க சித்தாந்த நூல்கள் படிக்க வேண்டும். புதுமை என்பது சமயத்தில் இல்லை. எல்லாம் பழமையானவை.

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்த வழக்கறிஞர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் சமயக்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினார். புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஆர், என். சிவப்பிரகாசம். உபதலைவர்கள்: திருவாளர்கள் வே. சங்கரப்பிள்ளை, டி. டி. ஜெயரத்தினம், வ. சரவணமுத்து, மு. ஞானப்பிரகாசம், செ. நடராசா. காரியதரிசி: திரு. இராசண்முகரத்தினம். உதவிக்காரியதரிசி: திரு. எஸ். கணேஷ், பொருளாளர்: திரு. ந. சி. சுப்பிரமணியம், உதவிப்பொருளாளர்: திரு. மு. நடராசா, கணக்குப் பரிசோதகர்: திரு. எஸ். கந்தையா.

15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## மேதினி உய்யவந்த..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிகளை மதித்து அதே சமயத்தில் அவர்களை எதிர்த்து தொழிலைக் காத்து உரிமையைப் பேணி உற்பத்தியைப் பெருக்கி லாபத்தில் பங்கு கேட்டு போராட முற்படுவதே தொழிற் சங்க இயக்கத்தின் கடனாகும் எனவே தொழிலாளி வர்க்கத்தினுடைய வளர்ச்சிக் கட்டத்தின் முதுகெலும்புகளென விளங்கும் தொழிற் சங்கங்களை அழிக்க முயல்வதற்குப் பதிலாக அங்கீகரித்தாகவேண்டும். சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதற்குப் பதிலாக சிநேக மனப்பான்மையுடன் சகித்து வாழும் பண்பை தொழிற் சங்க இயக்கத்தைப் பொறுத்த மட்டில் தமிழ்ப் பிரதேச முதலாளிகள் கைக்கொள்ள வேண்டும். கடைகள், அச்சகங்கள், கராஜ்கள், எங்கும் உடையவர்களும், உழைப்பவர்களும் இனத்தவர்களே. மொழியால் மாத்திரமன்றி இரத்தத்தாலும் ஒரே இனத்தவர்கள் ஆனால். நடைமுறையில் 8 மணி நேரவேலை, சம்பளம், விடுமுறை போன்ற பிரச்சினைகளைக் கூட சட்டமொருபுறமிருக்க மனிதாபிமானங்கள் கொண்டு நோக்கவே மறுக்கின்றோம்.

### தம்மைத்தாமே உணர்ந்தனர்.

மே தினம் தொழிலாளர் தம்மைத்தாமே உணரும் திருநாள். இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைச்சேர்ந்த தலைவர்களும் ஒருவரான அருணேவிஸ் அப்புஹாமி என்பவர் தமிழில் தொழிலாளர்களின் பலம் பற்றி யாழ்ப்பாணத்தில் முன்பு ஓர் முறை நடந்த மே தினத்தில் பேசியது நினைவு கூரத்தக்கதில் ஒன்றாகும். (தொழிலாளிகளாகிய நாம் உருவத்தைத் தாமே காண முடியாத நிலையில் திண்டாடித் தவிக்கும் சிறு கண் படைத்த யானையை ஒத்தவர்கள் ஆகிறோம். என்று நமது பலத்தை நாமே உணர்கிறோமே அன்றையே எமது வர்க்கம் வாழும் என்றார்.) தொழிலாளி வர்க்கம் தனது பலத்தை தானே உணர்ந்து கொள்ளத்தக்க பிறருக்கும் உணர்த்தி வைக்கத்தக்க ஒரே புனிதத் திருநாள் மே தினம் ஆகும். மேதினி உய்ய வந்த இந்த மகத்தான பொன்னாளை உலகப் பாட்டாளி வர்க்கம் இந்த மண்ணில் மனித இனம் உள்ள்வரை கொண்டாடி வரும்.

வாழ்க தொழிலாளர் ஐக்கியம்! வாழ்க மேதினம்!

---

## கட்டைவேலி கிராம சபை உபதேர்தல்

உடுப்பிட்டி, ஞாயிறு

கட்டைவேலிக் கிராமச் சங்கத்தின் 6-வது வட்டார அங்கத்தவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததையடுத்து, அவ்வட்டாரத்தின் உபதேர்தலுக்கான அபேட்சகர் பத்திரங்கள் மே. மாதம் 3-ம் திகதி தாக்கல் செய்யலாமெனத் தேர்தல் அதிகாரி விடுத்த ஒரு அறிக்கை கூறுகிறது.

---

## அங்கோலாவுக்கு மேலும் துருப்புக்கள்

லிஸ்பன், ஏப்ரல் 30

லிஸ்பனிலிருந்து 800 துருப்புக்கள் அங்கோலாவுக்குப் புறப்பட்டிருக்கின்றன. அங்குள்ள போர்த்துக்கல் படைகளை மேலும் பலப்படுத்துமுகமாகவே இத்துருப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

---

## ஐயாறன்

(4-மபக்கத் தொடர்ச்சி)

அவரும் அவர்தம் தொண்டும் வாழ்க!

* * *

"கால்களால் பயன்என் அரன்
கோவில் வலம் வந்து, கோலக்
கோபுரக்
கோகரணம் சூழாக்கால்களால்
பயன் என்?"

— திருநாவுக்கரசர்

---

## சட்டவிரோதகுடியேற்றம் குறைந்தது

கொழும்பு, திங்கள்

இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களின் தொகை சென்ற வருடத்தில் மிகவும் குறைந்துவிட்டதென்று பொலிசாரின் புள்ளி விபர அறிக்கையொன்று கூறுகிறது.

1961-ம் ஆண்டில் இலங்கையில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென 2,978 பேர் கண்டுபிடிக்கப் பட்டனர். 1960-ம் வருடத்தில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களென 3,848 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

1960-ம் வருடத்தைவிட 40 சதவிகிதம் சட்டவிரோதமாகக் குடியேற்றம் 1961-ம் வருடத்தில் குறைவடைந்ததற்கு கண்காணிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டதே காரணமென பொலிசார் கருத்துத் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாகக் குடியேறியவர்களெனக் கண்டுபிடிக்கப்பட்டவர்களெல்லோரும் தலைமன்னாரிலும், ஊர்காவற்றுறையிலுமுள்ள தடுப்புக்காவல் முகாம்களில் தற்காலிகமாகத் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

---

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 30

அல்ஜீரியாவில் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக 10 பேர் மாண்டனர். 6 பேர் காயமடைந்தனர். வார இறுதி வரை அங்கு 42 பேர் மாண்டனர். 23 பேர் காயமடைந்தனர். கடந்த சனிக்கிழமை ஓ. ஏ. எஸ். பயங்கர ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டார்.

---

## வடமராட்சி மாவட்ட பதிவுகாரர் தேர்தல்

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சி மாவட்ட விவாகப் பதிவு காரருக்கான எழுத்துப் பரீட்சையொன்று வெள்ளிக்கிழமை முற்பகல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்பரீட்சையில் ஆசிரியர்கள் உட்பட இருபெண்களும்கலந்து கொண்டார்கள்.

---


### விற்பனைக்கு

A 40 "குட்ஸ் வான்" CN 5 ஆயிரம் தொடர்பிலக்கமுள்ளது நல்ல நிலைமையிலிருக்கிறது—விபரங்கட்கு P. பரமசிவம், 184, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

சுறுசுறுப்பும் திடகாத்திரமும் உள்ள இளைஞர்கள் தேவை. மத்தியான உணவுப் பார்சல் விநியோகச் சேவைக்கு சொந்தச் சைக்கிள் வைத்திருப்பவர்களே விண்ணப்பஞ் செய்யவும். விநோதன் ஸ் அன் கோ, 108, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 286.


---

### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக
'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ........................................

கல்லூரி ........................................

எனது பெயர் ........................................

விலாசம் ........................................

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

---




# திருக்கேதீச்சர ஆலய திருப்பணி நிதிக்கு

குமாரி சாந்தா ரமணி மகேந்திரா

சென்னை கலாசேத்திர மாணவி அவர்களின்

## பரதநாட்டியம்

கலாசேத்திர வாத்திய குழுவினருடன்

### யாழ்-மாநகரசபை மண்டபத்தில்

இன்று 1 – 5 – 62 செவ்வாய்க்கிழமை
மாலை 7-00 மணிக்கு நடைபெறும்.

பிரவேசக்கட்டணம் ரூபா: 10-00, 5-00, 3-00, 2-00.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.